ISSN 1391-9504

# Vijey விஜய் விஜய்

22.09.2010 - மலர் 07, இதழ் 29



## புவியின் வெப்பம் மேலும் அதிகரிப்பு

## நோயை ஏற்படுத்தும் உணவுகள்

## இலங்கையின் வங்கித்தொழில் வரலாறு

## கப்பல் போக்குவரத்தின் ஆரம்பம்

விலை ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கறுவாத் தொழிலாளரின் வேலை நிறுத்தம்

சியனே கோரளை மற்றும் மாத்தறை மக்களால் ஆரம்பிக்கப்பட்ட கலவரம் ஏனைய திசாவைகளுக்கும் பரவியது. கறுவாப் பட்டை உரிப்போர் தமது வேலைகளை நிறுத்தினர். மன்னனுக்குச் சொந்தமான பிரதேசங்களுக்குச் சென்று தங்கினர். மூன்று கோரளை, காலி, மாத்தறை, சல்பிட்டி கோரளை மற்றும் றைகம கோரளை ஆகிய பிரதேசங்களில் உள்ள மக்கள் சில தீர்மானங்களுக்கு வந்தனர். மன்னர் உத்தரவிட்டதால் வர்த்தக சங்கத்திற்கு அடிபணிவதில்லை என்பதே அவர்களின் முக்கிய தீர்மானமாகும். இம்மக்கள் மன்னனைத் தமது தலைவனாக இன்னும் ஏற்றுக்கொள்கின்றனர் என்பதை ஒல்லாந்தர்கள் மிகத்தெளிவாக அறிந்து கொண்டனர். தமது கறுவா வர்த்தகத்திற்குப் பெரும் பாதிப்பு ஏற்படப் போகின் றது என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டனர்.இதனால், இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளைக் கைவிடும்படி வர்த்தக சங்கம் கோரிக்கை ஒன்றை விடுத்தது.

கறுவா தொழிலாளர் கேட்ட அனைத்தையும் அவர்களுக்குப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதாக ஒல்லாந்த ஆள்பதி உறுதியளித்தார். அது மாத்திரமல்ல; அவர்களிடம் அறவிட வேண்டிய வரிகள் அனைத்தையும் நீக்கினார்.

சிலர் வர்த்தக சங்கம் சார்பாக நடந்து கொண்டனர். வேறு சிலர் சங்கத்தை விமர்சிக்க ஆரம்பித்தனர். இதனால், அதிக சலுகைகளை வழங்கச் சங்கம் முயற்சி செய்தது. மீண்டும் சிலர் வேலைகளை ஆரம்பித்தனர். எப்படி இருந்தபொழுதிலும் பெரும்பான்மையானோர் கடுமையான எதிர்ப்பை வெளிக்காட்டினர். இவர்களைக் கலகக்காரர்கள் என ஒல்லாந்தர்கள் தீமானித்தனர். அவர்களைப் பயமுறுத்தி அடிபணிய வைக்கும்பொருட்டு, யுத்த சேனையொன்றை அனுப்பும்படி வர்த்தக சங்கம் பத்தேவியாவைக் கேட்டுக்கொண்டது. எனினும், கலவரம் மேலும் பல இடங்களுக்குப் பரவியது. இதன்போது மன்னர் விளைநிலங்களை மீண்டும் தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்தார். எவரும் வர்த்தக சங்கத்திற்குச் சேவை செய்யும்பொருட்டு இணையவேண்டாம் என கலகக்காரர்கள் நாட்டின் பட்டிதொட்டி எங்கும் பிரசாரம் செய்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதாரண பெறுபேறுகளை அதிகரிப்பதற்கான செயலமர்வுகள் தோல்வி

க.பொ.த சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளை அதிகரிக்கும்நோக்கில் கல்வி அமைச்சு மற்றும் மாகாண சபை என்பன இணைந்து ஆரம்பித்த செயலமர்வு களுக்கு மாணவர்களின் பங்களிப்பானது மகிழ்ச்சிய ளிக்கக்கூடியதாக இல்லை என மாகாண சபை அதிகாரிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

பரீட்சைகளின் போது மாணவர்கள் அதிகளவு சித்தி எய்யத் தவறுகின்ற கணிதம், விஞ் ஞானம், ஆங்கிலம், தாய்மொழி போன்ற பாடங் களுக்கு விடைய ளித்தல், வினாத்தாள்கள் தயாரிக்கப் படும் முறை என்பன தொடர்பில் மாணவர்களுக்கு அறிவூட்டி, பரீட்சைக்கு முகம்கொடுக்க அவர்களைத் தயார்படுத்துவதே இந்த நடவடிக்கையின் முக்கிய நோக்கமாகும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.






## கொழும்பு சர்வதேச புத்தகக் கண்காட்சி 2010

இலங்கை புத்தக வெளி யீட்டாளர்கள் சங்கத்தின் பிரதான ஏற்பாட்டின்கீழ் 12 ஆவது கொழும்பு சர்வதேச புத்தகக் கண்காட்சி 2010, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இம் மாதம் 18 ஆம் திகதி ஆரம்ப மானது.

இக்கண்காட்சியானது 18 ஆம் திகதி தொடக்கம் 26 ஆம் திகதி வரை காலை 9.00 மணியிலிருந்து இரவு 9.00 மணி வரை நடைபெறும்.

# அறநெறி வகுப்பு குறித்து பாடசாலைகளில் பதிவேடு

மேல் மாகாணத்தின் பாடசாலை மாணவர்கள் ஞாயிற்றுக்கிழமை களில் அறநெறி வகுப்புகளுக்கு சமூகமளிப்பதை உறுதிப்படுத்தும் பதிவேடு ஒன்றை அந்தந்த பாடசாலைகளில் நடைமுறைப் படுத்த வேண்டும் என மாகாண கல்வி அமைச்சு சகல பாடசாலை அதிபர்களுக்கும் ஆலோசனை வழங்கியுள்ளது.



குறித்த மாணவர் அறநெறி வகுப்புக்கு சமூகமளித்ததாக அறநெறி வகுப்பாசிரியர் கையெழுத்திட்டு உறுதிப்படுத்த வேண்டும் என்பதோடு, அதில் பாடசாலை வகுப்பாசிரியரும் கையெழுத்திட வேண்டும் என குறித்த ஆலோசனைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனடிப்ப டையில், தொடர்ச்சியாக அறநெறிப் பாடசாலைக்கு சமூகமளிக்கின்ற மாணவர்களுக்கு பாடசாலை மாணவர் தலைவர் பதவி மற்றும் வெளி வாரி செயற்பாடு களில் ஈடுபடுவ தற்கான வாய்ப் புக்களைப் பெற்றுக்கொடுப் பதற்கு வழியமைக்க வுள்ளதாக மேல் மாகாண முதல மைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரி வித்துள்ளார்.


Vijey விஜய

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk


# பிரதான நகர புகையிரத நிலையங்களில் புத்தக விற்பனைக்கூடங்கள்



நாட்டின் பிரதான நகரங் களில் அமைந்துள்ள சகல புகையிரத நிலையங்களிலும் கல்வி வெளியீட்டுத் திணைக்க ளத்தின் புத்தக விற்பனைக் கூடங்களை ஆரம்பிப்பதற்கு அத்திணைக்களம் தீர்மானித்துள்ளது.

கல்வி வெளி யீட்டுத் திணைக்க ளத்தினால் வெளி யிடப்படுகின்ற நூல்களைக் கொள்வனவு செய்வதில் பொது மக்களுக்கு சிரமம் இருப்பதனால், அதனை நிவர்த்தி செய்யும்பொருட்டு புகையிரத நிலை யங்களில் விற்பனைக்கூடங்கள் ஆரம் பிக்கப்படவுள்ளதாக அத்திணைக் களம் மேலும் அறிவித்துள்ளது.

## 'சேகரிப்போம் சுவீகரிப்போம்' பரிசுப் போட்டி

* பாடசாலை பேக்ஸ்,
* டீ-ஷேர்ட்ஸ்,
* டீ-மக்ஸ்,
* கெப்ஸ்களை

வெல்லுங்கள்!

இலங்கை வரைபடமானது பன்னிரெண்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பாகமும் ஒவ்வொரு வாரத்திலும் பிரசுரிக்கப்படும். அவ்வாறு வாராவாரம் பிரசுரிக்கப்படுகின்ற பகுதிகளை தொடர்ச்சியாக சேகரித்து வாருங்கள். பன்னிரெண்டு பகுதிகளையும் சேகரித்த பின்னர், இலங்கையின் வரைபடம் முழுமைப்படும் வகையில் அவற்றை ஒழுங்கமைத்து-தபால் அட்டையில் ஒட்டி-எமக்குத் தபாலிட்டு பரிசுகளை சுவீகரித்துக்கொள்ளுங்கள். முழுமைப்படுத்தப்பட்ட வரைபடத்தை தபாலிட வேண்டிய திகதி பின்னர் அறிவிக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு 011-2479653 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.



**வெற்றி பெறுவோருக்கான பரிசுகள்**

10 பேருக்கு - பாடசாலை பேக்ஸ் (School bags)
15 பேருக்கு - டீ-ஷேர்ட்ஸ் (T-Shirts)
100 பேருக்கு - கெப்ஸ் (Caps)
100 பேருக்கு - டீ-மக்ஸ் (Tea mugs)

**விதிமுறைகள்**

- ஒருவர் எத்தனை தபாலட்டைகளையும் அனுப்பலாம்.
- முழுமைப்படுத்திய வரைபடத்தை தபாலட்டையில் மாத்திரமே அனுப்புதல் வேண்டும்.
- தபாலுறையில் அனுப்புபவை நிராகரிக்கப்படும்.
- நிழற்பிரதிகள் (Photo copy) ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இந்த வார பாகம்
இல: 11




## உங்கள் கவனத்திற்கு...

இலங்கை வரைபடத்தின் பாகங்களை இணைக்கும் போட்டியின் ஆரம்பப் பகுதிகளான இல.1 தொடக்கம் 5 வரையிலான பாகங்களை சேகரிக்கத் தவறியவர்களுக்காக மீண்டுமொரு வாய்ப்பை அளிக்கவுள்ளோம்.

அதன்படி, 06.10.2010 ஆம் திகதி வெளிவரவுள்ள 'விஜய்'யில் இல.1 தொடக்கம் 5 வரையிலான பாகங்களை மீண்டும் பிரசுரிக்கவுள்ளோம் என்பதை அறியத்தருகின்றோம். போட்டி முடிவுத் திகதியும் அனுப்ப வேண்டிய முகவரியும் அடுத்த வாரம் பிரசுரமாகும்.


60 DAYS BASIC / SPOKEN ENGLISH / தபால் மூல ஆங்கில பாடநெறி

5ம் ஆண்டு புலமை பரீட்சையை முடித்த மாணவர்களுக்கு என விசேடமாக தயாரிக்கப்பட்ட BASIC / SPOKEN ENGLISH தபால் மூல பாடநெறி

எமது இந்த BASIC / SPOKEN ENGLISH அடிப்படையும் பேச்சுப் பயிற்சி பாடநெறியானது 7 வயது தொடக்கம் 12 வயது வரையான சின்னம் சிறார்க்கு சிறந்த பாடநெறியாகும்
அடிப்படையில் இருந்தே தமிழ் விளக்கத்துடன் கற்றுக் கொடுக்கப்படும் தமிழ் எழுதவாசிக்க தெரிந்து இருந்தால் போதுமானது.

இலகுவாக ஆங்கிலம் கற்க சிறந்த வழிகாட்டி E.L.I யின் தபால் மூல ஆங்கில பாடநெறிகள்.

BASIC / SPOKEN ENGLISH & DIPLOMA IN ENGLISH
பாடநெறியை தொடரும் உங்களுக்கு
அழகிய T.SHIRT ஒன்று Phone Sim Card மற்றும்
30 Easy way English புத்தகம் ஒன்று இலவசமாக வழங்கப்படும்

அங்கீகரிக்கப்பட்ட DIPLOMA சான்றிதழ் ஒன்று வழங்கப்படும்.

மேலதிக விபரங்களை பெற பெயர்.முகவரியை தெளிவாக 0777-220002 க்கு SmS செய்யுங்கள்

இலங்கையில் எப்பாகத்தில் இருந்தும் எம்முடன் இணைய முடியும்

THE ENGLISH LANGUAGE INSTITUTE
P.O. BOX 83, KANDY. Tel: 081-561 5 561, 0777-220002


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வாஸ்கொடகாமா

# கப்பல் போக்குவரத்துக்களின் ஆரம்பம்



மார்க்கோபோலோ



**மனித நாகரிகங்கள் நதியோரங்களில் இருந்துதான் ஆரம்பித்தன. அந்தவகையில் மனித வாழ்வுடன் இரண்டறக் கலந்துள்ள நீரில், மனித செயற்பாடுகள் ஆரம்பித்தவுடன் மிருகங்கள், மீன்கள் போன்று நீந்தவும் மனிதன் கற்றுக்கொண்டான். அதன்பின்னர் மிதக்கும் பொருட்கள் ஊடாக நீரின் மேல் மிதந்து செல்வதற்கான அறிவையும் பெறலானான். அதற்கமைய மரக் கட்டைகள் மீது அமர்ந்துகொண்டு சென்றவன் அதனை இன்னும் இலகுவாக்கி, நீரின்மேல் காற்றின் உதவி கொண்டு ஓரிடத்திலிருந்து மற்றைய இடத்துக்கு இலகுவாகவும் விரைவாகவும் சென்றுவர கப்பல்களை கட்டும் முயற்சியில் ஈடுபட்டான்.**

இத்தகைய முயற்சியின் பலனாக, முதன்முதலாக கி.மு 600 ஆம் ஆண்டளவில் கட்டப்பட்ட பாய்மரக் கப்பலானது காற்றின் உதவியோடு செலுத்தப்பட்டது. இதன்பின்னர் பல்வேறு தேவைகளுக்காக பாய் மரங்களின் உதவியுடன் கப்பல்கள் கட்டப்பட்டன. அந்தவகையில், அக்காலங்களில் போர்த்துக்கேயர், ஆங்கிலேயர் போன்றோர் இத்தகைய கப்பல்களைப் பயன்படுத்தியுள்ளனர். காற்றின் உதவி கிடைக்காத போது துடுப்புக்களின் உதவியுடன் கப்பல்கள் செலுத்தப்படலாயின.

1787 ஆம் ஆண்டு காலப்பகுதியில்தான் இயந்திரத்தின் உதவியுடன் நீராவியில் இயங்கும் முதலாவது நீராவிக் கப்பல் 'ஜான்பிட்ச்' என்னும் அமெரிக்கரால் உருவாக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. இதன்பின்னர் துடுப்புக்கள் கொண்டு கப்பல்கள் செலுத்தப்படுவது நிறுத்தப்பட்டாலும் இக்கப்பல்கள் உள்நாட்டுப் போக்குவரத்துகளில் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வந்தன. இக்காலப்பகுதியில் நாடுகாண் பயணங்களை மேற்கொள்வதற்கு இது போன்ற கப்பல்கள் பயன்படுத்தப்படலாயின. போர்த்துக்கேயரான 'பார்த்தலோமியஸ் டயஸ்' 1488 ஆம் ஆண்டில் ஆபிரிக்காவின் மேற்குக் கரையோரத்திலிருந்து ஆபிரிக்காவின் தென் முனையை அடைவதற்கு பாய்மரக்கப்பல்கள் உதவலாயின. புயல் காரணமாக, மேலும் பயணிக்க முடியாததால் அவ்விடத்திற்கு 'புயல்முனை' என்ற பெயரும் வரலாற்றில் பதிவாகியுள்ளதைக் காணலாம்.

'மார்க்கோபோலோ, வாஸ்கொடகாமா, கப்ரால், கிறிஸ்தோபர் கொலம்பஸ் வெஸ்புஸி, பேர்டினன் மகலன், வஸ்கோ நியுனெஸ் தபெல்போவா, பர்னாண்டோ கோடொஸ், ஜோன் கபோட், செபஸ்தியன் கபோட், பெக்வியஸ், ஜொய்லட், தலாசலே, சப்மளேன் மார்க்விடே, ஹென்றி ஹட்சன் போன்றோர் நாடுகளைக் கண்டுபிடிப்பதற்கும் கடலில் புதிய பாதைகளை உருவாக்குவதற்கும் வியாபாரத் தொடர்புகளுக்கும் கண்டங்களை அறியவும் மனித நாகரிகங்களை அறிந்துகொள்ளவும் இப்பாய்மரக்கப்பல்கள் உதவியாக அமைந்தமை வரலாறாகியது.

அந்தவகையில், நாடுகாண் பயணங்களுக்கு மிகவும் உறுதுணையாக அமைந்த பாய்மரக் கப்பல்களுக்கு நீராவி இயந்திரத்தைப் பொருத்தி மேலும் வேகமாகச் செல்ல ஆரம்பித்த போதுதான் பாய்மரக்கப்பலான 'ஸாவன்னா' என்ற பெயருடைய கப்பல் 1819 ஆம் ஆண்டில் அமெரிக்காவிலிருந்து அட்லாண்டிக் கடலையும் கடந்து வெற்றிகரமாக இங்கிலாந்தை வந்தடைந்தது. நீராவியைக் கொண்டு முதன்முதலில் பயன்படுத்தப்பட்ட இக்கப்பலைத் தொடர்ந்து அனைத்து வகைக் கப்பல்களும் நீராவியின் உதவிகொண்டு கடலில் பயணிக்க ஆரம்பித்தன. அப்போதுதான் 'டர்பைன்' என்ற இயந்திரத்தை 1897 ஆம் ஆண்டில் 'சேர்.பார்சன்' என்பவர் கண்டுபிடித்தார். அத்துடன், அவர் 'டர்பினியா' என்ற புதிய கப்பலைக் கட்டி செலுத்தியும் காட்டினார்.

நீராவியில் பயணித்த கப்பல்களுக்கு இன்னும் விரைவாகவும் குறைந்த செலவுடனும் பயணிப்பதற்குரியவாறு டீசல் இயந்திரங்கள் உருவாக்கப்பட்டு, கப்பல்கள்கள் உருவாக்கப்படலாயின. இதன்பின் டீசல்



கப்பல்களின் பாவனை அருகி மின்சாரத்தில் இயங்கும் கப்பல்கள் பரவலாக பாவனையில் ஈடுபடுத்தப்படலாயின. இவ்வகையான நவீன கப்பல்களின் உருவாக்கத்துக்கு அன்றைய காலக் கப்பல்களே வழிவகுத்தன.

அத்துடன், 'குவின் மேரி' எனும் பிரிட்டிஷ் கப்பல்தான் முதன்முதலாக 200 மீற்றர் வேகத்துடன் ஓடிய நவீன ஆடம்பரக் கப்பல்களின் தோற்றத்திற்கு முன்னோடியாக அமைந்தது. இதன் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பிரான்ஸ் 1032 அடி நீளம் கொண்ட 'நோர்மண்டி' எனப் பெயர்கொண்ட மிகப்பெரிய கப்பலைத் தயாரித்தது.

இது கப்பலில் இன்னொரு வகை நீர்மூழ்கிக் கப்பல்களாகும். இவை நீரைக் கிழித்துக்கொண்டு கடலினுள் சென்று எதிரிகளையும் எதிரிகளின் தளங்களையும் கப்பல்களையும் தாக்கக்கூடியவை.

இந்தவகை, நீர்மூழ்கிக் கப்பலானது முதன்முதலாக ஒல்லாந்து நாட்டில் 1620 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இவை மிருகங்களின் தோல்களைப் பயன்படுத்தி மூடியநிலையில் உருவாக்கப்பட்டிருந்தன. இதன்பின்னர் 1727 இல் அதிகளவான நீர்மூழ்கிக் கப்பல்கள் இங்கிலாந்தினால் தயாரிக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டன. உலகில் அதிக நாடுகளைக் கைப்பற்றிய இங்கிலாந்திற்கு இதுபோன்ற கப்பல்களின் பயன்பாடு மிகவும் அவசியமான ஒன்றாகவே அன்று இருந்தது.

1880 ஆம் ஆண்டில் நீராவியின் உதவியுடன் உருவாக்கப்பட்ட நீர்மூழ்கிக் கப்பல்கள் பல பயன்படுத்தப்பட்டு வந்தாலும் காலப்போக்கில் அதாவது, முதலாம் உலக மகா யுத்தத்தின்போது, மின்சாரத்தினால் இயங்கும் பல நீர்மூழ்கிகளும் உருவாக்கப்படலாயின. இன்று கப்பல்கள், பல வடிவங்களில் வலம் வருகின்றன. 'டைட்டானிக்' என்ற ஆடம்பரக் கப்பல் அதன் வெள்ளோட்டத்தில் அத்திலாந்திக் கடலில் மூழ்கியமை அனைவரும் அறிந்ததே. அதனை திரைப்படமாகத் தயாரித்தும் வெளியிட்டனர். அதுமட்டுமா? யுத்தங்களின்போது, கப்பல்கள் பாரிய பங்களிப்பை செய்து வருவதுடன், நூற்றுக்கணக்கான விமானங்களை ஏற்றிக்கொண்டு வரும் நாசகாரிக் கப்பல்களும் வணிகக் கப்பல்களும் பயணிகள் கப்பல்களும் ஆடம்பர மற்றும் அறிவைப் பரப்பும் நூலக வடிவிலான நடமாடும் வாசிகசாலைகள் போன்ற கப்பல்களும் உலகின் நாலாபுறமும் வலம் வந்துகொண்டுதான் இருக்கின்றன.

அத்துடன், கப்பல்களின் பெருக்கத்திற்கேற்ப துறைமுகங்களும் உருவாக்கப்பட்டு வரும் இன்றைய நாட்களில் மீன்பிடிக்கவும் மீனைப் பதப்படுத்தி நீண்டகாலம் வைத்திருக்கும் கப்பல்களும் கடலாய்வுக்குப் பயன்படும் கப்பல்களும் நவீன வசதிகளுடன் உருவாக்கப்பட்டு வருகின்றன.

**எஸ்.எல்.மன்சூர்**



நீர்மூழ்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலப்புலோகம் பித்தளை

செப்பு மற்றும் துத்தநாகம் ஆகிய உலோகங்களின் கலவையே பித்தளை. செப்புடன் துத்தநாகத்தை சேர்க்கையிலேயே உறுதியும் கடினத் தன்மையும்கொண்ட பித்தளை கிடைக்கின்றது. இது ஓரளவுக்கு தங்கத்தை ஒத்த நிறமுடையது. வீட்டுப் பாவனைப்பொருட்கள், அலங்காரப் பொருட்கள், ஆயுதங்கள் என பல்வேறு உற்பத்திகளுக்காக பித்தளை பயன்படுத்தப்படுகின்றது.

40 சதவீதத்திற்கும் குறைவான துத்தநாகத்தைக் கொண்ட பித்தளையிலேயே பாத்திரங்கள் செய்யப்படுகின்றன. 45 சதவீதத்துக்கும் மேலான அளவு துத்தநாகத்தைக் கொண்ட பித்தளை இலகுவில் நொருங்கக்கூடியது. எனவே, இது பொதுவான பயன்பாட்டுக்கு ஏற்புடையதன்று.



வேலை செய்வதற்கு எளிதாகவும் கடினமானதாகவும் இருப்பதால் சிறந்த உற்பத்திக்குரிய பொருளாக பித்தளை கருதப்படுகின்றது.



# முரடனை வியக்க வைத்த நட்பு



இங்கிலாந்தின் புகழ்பெற்ற கவிஞர்களில் ஒருவர்தான் லோர்ட் பைரன் (Lord Byron). இவரும் இங்கிலாந்தின் பிரதமராக விளங்கிய சேர் ரொபர்ட் பீலும் (Robert Peel) சிறு வயதிலிருந்தே நெருங்கிய நண்பர்கள்.

சிறுவர்களாக இருக்கும்போது ஒருநாள் இவர்கள் இருவரும் பாடசாலை சென்று திரும்பி வரும் வழியில், ரொபர்ட் பீலை முரடன் ஒருவன் பலமாகத் தாக்கினான். உடனே, சிறுவன் பைரன் முரடனைத் தடுத்து, "நீ எத்தனை அடிகளை ரொபர்ட்டுக்கு வழங்கப் போகிறாய்?" என்று கேட்டான். அதற்கு முரடன், "அதை நீ ஏன் கேட்க வேண்டும்?" என்று கோபத்துடன் கேட்டான்.

அதற்கு பைரன், "ரொபர்ட்டுக்கு நீ கொடுக்க விரும்பும் அடிகளில் பாதியை எனக்குத் தரும்படி கூறவே உன்னிடம் கேட்டேன்" என்று உருக்கமாகக் கூறினான். இதைக் கேட்டதும் அவர்களின் ஆழமான நட்பைக் கண்டு அந்த முரடன் வியப்படைந்தான். இருவரையும் தாக்காமல் அவன் அங்கிருந்து உடனே நகர்ந்து சென்றுவிட்டான்.

# ஷ்... உங்களுக்கு மட்டும்!


- ★ டொல்ஃபின்கள் ஒரு கண்ணைத் திறந்தபடியே உறங்குகின்றன.
- ★ மைக்ரோசொஃப்ட் வின்டோஸ் கணிப்பொறியில் CON என்ற பெயரில் ஃபைல் அல்லது ஃபோல்டரை உருவாக்க முடியாது.




- ★ டெல்மேஷன் நாய்களுக்கு பிறக்கும் போது புள்ளிகள் இருப்பதில்லை.



- ★ பாம்புகள் ஒருபோதும் தாவர உணவுகளை உணவாகக்கொள்வதில்லை.
- ★ மனித உடலில் 206 எலும்புகள்தான் இருக்கின்றன என்றாலும், குழந்தைப் பருவத்தில் உடலில் 300 எலும்புகள் வரை இருக்குமாம்! பின்னர்தான் அவை ஒன்றிணைந்து 206 ஆகின்றன.



- ★ மனிதனின் எலும்பு கொங்கிரீட்டைவிட நான்கு மடங்கு உறுதி வாய்ந்தது.
- ★ நாம் இருபது நிமிடங்களில் 1000 கன அடி காற்றைச் சுவாசிக்கின்றோம்.
- ★ தாயின் வயிற்றில் இருக்கும் குழந்தைகளால் கேட்கவும் கற்றுக்கொள்ளவும் முடியும்.



## கல்வி முகாமைத்துவம் - 21

### கற்றலுக்கான ஆலோசனைகள்

# ஆக்கத்திறனைப் பெறல்

நாளுக்கு நாள் நவீனமடைந்துவரும் இவ்வுலகத்திற்கேற்ப புதிய மாற்றங்கள் ஏற்பட வேண்டும். மாற்றம் என்பது ஒன்றை இல்லாமல் செய்வதல்ல; மாறாக ஒரு அம்சத்தை அறிவுபூர்வமாக மெருகூட்டுவதாக அது அமைய வேண்டும். இதற்கு 'ஆக்கம்' என்ற உணர்வு ஏற்பட்டால்தான் ஒன்றை மாற்றியமைக்கவும் புதியனவற்றை உருவாக்கவும் முடியும். இந்த உருவாக்கத்திற்கு இன்றைய மாணவ சமுதாயமே முன்வர வேண்டும்.

கல்வி என்றால் பரீட்சைக்காக மட்டும் கற்பதோ அல்லது புத்தகத்தில் இருக்கும் முழுவதையும் சிந்தனையில் கொண்டுவருவதோ அல்ல. அதற்கு மேலதிகமாக



கற்ற விடயத்தை செயற்படுத்தவும் கற்றதை வைத்து மேலும் சிந்திக்கவும் வேண்டும். இந்தக் கல்விச் செயல்களை அதிகபட்ச அளவில் வளர்த்துக்கொள்ளவும் வேண்டும்.

இதனை மாணவர்கள் நன்கு புரிந்துகொள்ள வேண்டும். அத்துடன், மாணவர்களின் நலன்கருதி பெற்றோர்களும் ஆசிரியர்களும் ஆக்கத்



திறனுடைய உண்மையான கருத்துக்களையும் ஆக்கத்திறன் உருவாகும் திறன் பற்றிய அறிவையும் ஆக்கத்திறனைக் கண்டறியும் அல்லது அதனை வளர்க்கும் வழிகளையும் அறிதல் அவசியமாகும்.

## ஆக்கத்திறன்

ஒருவருடைய 'படைப்பாற்றல்' (ஆக்கத்திறன்) அல்லது 'புதியன புனையும் உள்ளார்ந்த திறன்' அல்லது 'உள்ளத்தை உணர்ந்தறிந்து புதுப்பிக்கும் திறன்' போன்றவை ஆக்கத்திறனைச் சார்ந்தவை எனக் கூறலாம்.

## ஆக்கச் சிந்தனை

ஆக்கத்திறன் ஆனது ஓர் உருவாக்கும் திறனை உள்ளடக்கி உள்ளது. உருவாக்கும் திறனானது சிந்தனையை உள்ளடக்கியது. இத்தகைய சிந்தனையை 'ஆக்கச் சிந்தனை' என்று அழைக்கலாம். ஆக்கச் சிந்தனையின் விளைவு புதுமை உடையதாக இருக்கும்.

ஆக்கச் சிந்தனை அல்லது ஆக்கத்திறன் என்பது முக்கியமான மூன்றினைக் குறிப்பிடுகின்றது. அவையாவன;

1. ஒரு நிகழ்ச்சி ஏன் நடக்கிறது? என்பதற்குரிய விளக்கத்தை அறிதல்.
2. வாழ்க்கையில் நடக்க இருப்பவற்றை முன்கூட்டியே அறிதல்.
3. புதியவை புனைதல் (கண்டுபிடித்தல்) போன்றவையாகும்.



ஆக்கத்திறனுக்குத் தேவை வளமான ஆற்றலும் தூண்டுதலுமாகும். ஆக்கச் செயல்களை வெளியிடுவதற்கான வாய்ப்புக்கள், அது குறித்த கல்வி, அதற்கான பயிற்சி போன்றவை அளிக்கப்படாததால் பெரும்பான்மையான ஆக்கசக்திகள் முடிவில் வீணாகி விடுகின்றன. ஆகையால், ஆசிரியர்களும் பெற்றோர்களும் மாணவர்களிடையே ஆக்கத்திறனை வளர்க்க வேண்டிய சூழ்நிலையை உருவாக்கும் அவசியத்தை உணர வேண்டும்.

(தொடரும்)

-எம்.ஏ.எஃப்.சப்ரானா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கையின் வங்கி



இலங்கையில் தேசிய வங்கித்தொழில் 1828 ஆம் ஆண்டில் கண்டி வங்கி மூலம் ஆரம்பமாகியது. கண்டியில் பிரதான அலுவலகத்தைக்கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இவ்வங்கி, கொழும்பில் தனது கிளையொன்றையும் நிறுவியது. கோப்பிப் பயிர்ச்செய்கைக்குக் கடன் வழங்குவதையே பிரதான நோக்காகக் கொண்டிருந்தமையால், இவ்வங்கியானது 1831 ஆம் ஆண்டளவில் பெருநட்டத்தை எதிர்நோக்க நேர்ந்தது. பின்னர் வங்கியொன்றின் அவசியத்தன்மை காரணமாக, 1840 இல் 'இலங்கை வங்கி' என்ற பெயரில் ஒரு வங்கித்தாபனம் ஆரம்பிக்கப்பட்டது. அதுவும் கோப்பிப் பயிர்ச்செய்கைக் கடன் கொடுப்பனவுக்கே முக்கியத்துவம் கொடுத்தமையால் ஐந்தாண்டுகளில் மறைந்து போனது.



1843 இல் மேலைத்தேய இந்தியன் வங்கி தனது கிளையொன்றை ஆரம்பித்தபோதிலும் அதுவும் கோப்பிப் பயிர்ச்செய்கைக் கடன் நடவடிக்கைகளில் ஈடுபட்டதன் காரணமாக, வீழ்ச்சியுறும் நிலையிலிருந்தது. வெளிநாட்டு தாய்வங்கி இலாபமீட்டியதால், கிளை வங்கி மூடப்படாமல் தப்பிக்கொண்டது. 1845 ஆம் ஆண்டில் மேலைத்தேய இந்தியன் வங்கியுடன் மூடப்பட்ட 'இலங்கை வங்கி' கூட்டுச் சேர்ந்தது. இதுவே இலங்கையில் பிரபல்யமான வங்கியாக அக்காலத்தில் கருதப்பட்டமையால், 1884 வரை நாணயக்குற்றி, நாணயத்தாள் என்பன இவ் வங்கியால் வெளியிடப்பட்டதாகத் தெரிகின்றது.

1860 இல் 'சாட்டட் வங்கி' என்ற பெயரில் வங்கி ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. 1865 இல் 'ஏசியன் வங்கி' என்ற பெயரில் வெளிநாட்டு வங்கி ஒன்று ஆரம்பிக்கப்பட்டு, ஒரு வருடத்தில் அது நட்டமடைந்தது. 1884 இல் மேலைத்தேய இந்திய வங்கியின் மறைவோடு, நாணயக்குற்றிகளையும் நாணயத்தாள்களையும் வெளியிடுவதற்காக 'நாணய அமைப்பு' தொடங்கப்பட்டது. இதுவே, அக்காலத்தில் இலங்கை நாணயத்தை வெளிநாடுகளில் செயல்படுத்தத் தொடங்கியது.

வங்கித் தொழிற்பாட்டு முறை சீர்திருத்தம் பெற்றபோதிலும் 1900 வரை இலங்கையில் வெளிநாட்டு வங்கிகளே ஆதிக்கம் செலுத்தியுள்ளதை அறிய முடிகின்றது. இவ்வங்கிகள் பிரதானமாக தோட்டத்துறைத் தொழிலுக்கு கடன் கொடுப்பதையும் வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல்களை மேம்படுத்துவதையுமே நோக்காகக் கொண்டிருந்தன.

தேசிய வங்கித்தொழிலை மேற்கொள்வதற்கான பிரதான வங்கியொன்று இல்லாமையால், 1867 இல் ஆரம்பிக்கப்பட்ட 'மதராஸ் வங்கி' அத்தொழிலை மேற்கொண்டது. 1892 இல் வரையறுக்கப்பட்ட இந்தியன் வர்த்தக வங்கி, ஹொங்கொங் - பேனேசியா வங்கி, இந்திய-அவுஸ்திரேலிய-சீன சாட்டட் வங்கி என்பன ஆரம்பிக்கப்பட்டதோடு, 1917 வரை வேறு வங்கியெதுவும் இலங்கையில் ஆரம்பிக்கப்படவில்லை. 1917 இல் 'கொழும்பு வங்கி' என்ற பெயரில் பிரதான தேசிய வங்கியொன்று ஆரம்பிக்கப்பட்டது. இவ்வங்கியில் பணியாளர்களாக இலங்கைப் பிரஜைகளே சேவை புரிந்துள்ளனர். இவ்வங்கியானது நான்கு வருடங்கள் மாத்திரமே செயற்பட்டதுடன், பெருநட்டத்தை ஈடுசெய்துகொள்ள முடியாத நிலையில் 1921 இல் மூடப்பட்டது.

அதன்பின்னர் 1931 வரை பல்வேறு தேசிய வங்கிகள் உருவானபோதிலும், பிரதான தேசிய மூலதனக் கொடுக்கல் வாங்கல்களில் செட்டியார்களின் தாபனங்கள், கூட்டுறவுக் கடன் கொடுப்பனவுச் சங்கம் என்பன செயற்பட்டமை குறிப்படத்தக்கது. ஏனைய வங்கிகள் அனைத்தும் வெளிநாட்டு வர்த்தகத்தை நோக்காகக்கொண்டு செயற்பட்டன. 1931 இல் அரச ஈட்டு வங்கிக் கடன் கொடுப்பனவுக்கென்றே ஆரம்பிக்கப்பட்டபோதிலும், பெரும்பாலான உள்நாட்டவருக்கு உரிய நில உடைமைப் பத்திரங்கள் இல்லாமையால், குறிப்பிட்டளவு கடன்களை மாத்திரமே வழங்க முடிந்தது. 1931 இல் மத்திய வகுப்பினரின் தோற்றத்தின் பிரதிபலனாக, தேசிய பணப்பறிமாற்றல்கள் சம்பந்தமாக வங்கியொன்றின் தேவை உணரப்பட்டதன் காரணமாக, 1934 இல் 'இலங்கை வங்கிக் கொமிசன்' ஏற்படுத்தப்பட்டது. அதன் அறிக்கை 1937 இல் இங்கிலாந்து வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்டதன் பயனாக, 1938 ஆம் ஆண்டு 53 ஆம் இலக்க இலங்கை வங்கிச்சட்டத்தின் பிரகாரம் 1939 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி தற்போதைய 'இலங்கை வங்கி' தொடங்கி வைக்கப்பட்டது. அரச அனுசரணையுடன் ஆரம்பமான இவ்வங்கி பிரதானமாக சர்வதேச கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. 1934 இல் விவசாய-கைத்தொழிற்றுறைக் கடன் வழங்கும் திட்டம் இவ்வங்கி மூலம் மேற்கொள்ளப்பட்டமையானது, உள்நாட்டு விவசாயத்துறையையும் கைத்தொழில் துறையையும் மேம்படுத்தும் நோக்கிலேயாகும்.

படிப்படியாக ஏற்பட்ட வங்கித்துறை வளர்ச்சியும் அரசியல் ரீதியாக நாடு சுதந்திரம் பெற்றமையும் 1949 இல் 58 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் பிரகாரம் பதிவு செய்யப்பட்டு, 1950 ஒகஸ்ட் 27 ஆம் திகதி 'இலங்கை மத்திய வங்கி' உருவானது. இதுவரை செயற்பட்டு வந்த நாணய அமைப்பு இலங்கை மத்திய வங்கியுடன் இணைக்கப்பட்டது. பணக்கொடுக்கல் வாங்கல்களை மேலும் இலகுபடுத்தும் நோக்கில் 1955 இல் வெளிநாட்டு உதவியுடன் 'அபிவிருத்தி மூலதனக் கடன் தாபனம்' ஆரம்பிக்கப்பட்டது. இத்தாபனம் விவசாய விரிவாக்கம், கைத்தொழில்துறை அபிவிருத்திகளுக்கான கடன்களை வழங்குவதை பிரதான நோக்காகக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

1956 வரை இலங்கையில் வங்கித் தொழிலானது, படிப்படியாக வளர்ச்சிப் பாதையில் சென்றது. இலங்கை வங்கியின் செயற்பாடுகளை திறன்படுத்துவதற்கென 'வங்கிக் கொமிசன்' ஒன்றும் உருவாக்கப்பட்டது. அதன் பிரதிபலனாக, 1961 இல் இலங்கை வங்கி மக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# த்தொழில் வரலாறு

மயப்படுத்தப்பட்டது. பின்னர் 'கூட்டுறவு வங்கி' இடைநிறுத்தப்பட்டு, அரசு 50% பங்கையிட்டு, 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் பிரகாரம். 1961 ஜூலை 1 ஆம் திகதி 'மக்கள் வங்கி'உருவாக்கப்பட்டது. தேசிய வங்கி வரலாற்றிலேயே முக்கிய திருப்பம் என 1961 இல் இலங்கை வங்கி மக்கள் மயப் படுத்தப்பட்டதும், மக்கள் வங்கியின் ஆரம்பமாகக் கருதப்பட்டது. அத்தோடு, இவ்வாண்டிலேயே இலங்கையர் வெளி நாட்டு வங்கிக் கிளைகளில் கணக்கு வைப்பதும் தற்காலிகமாகத் தடை செய்யப்பட்டது. அதன் பிரதிபலிப்பே இலங்கையர்கள் தேசிய வங்கிகள் இரண்டிலும் கொடுக்கல் வாங்கல்களை ஆரம்பிக்கத் தலைப்பட்டமையாகும். இதன் காரணமாக, துரிதகெதியில் தேசிய வங்கிக் கிளைகள் நாடு முழுவதிலும் ஏற்படுத்தப்பட்டன.



மக்கள் வங்கியினூடாக, 1964 இல் கிராமிய வங்கிகள் ஆரம்பிக்கப் பட்டு, கிராமங்கள் தோறும் வங்கித் தொழில் அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச் செல்லப்பட்டது. இதற்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கியும் தனது பங்களிப்பைச் செய்தமை குறிப்பிடத் தக்கது. கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களின் நலன்கருதி 'கூட்டுறவு அபிவிருத்தி வங்கி' ஆரம்பிக்கப்பட்டது, 1970 இல் ஏற்படுத்தப்பட்ட கூட்டுறவு சீர்திருத்தத்தின்படி, கூட்டுறவுப் பிரதேசங்களை உள்ளடக்கியதாக கிராமிய வங்கிகள் ஏற்படுத்தப்பட்டன.

1968 இல் இலங்கையர்கள் வெளி நாட்டு வங்கிகளில் கணக்கு வைக்கும் தற்காலிக தடைச்சட்டம் நீக்கப்பட்ட போதிலும் ஏற்கனவே அதிகமானோர் தேசிய வங்கிகளில் கொடுக்கல் வாங்கல்களில் இணைந்து கொண்டமையால் அது அவ்வளவு முக்கியமானதாகக் கருதப்படவில்லை. 1969 இல் 'ஈஸ்டன் வங்கி' தேசிய வங்கியாக 'இலங்கை வர்த்தக வங்கி' என்ற பெயரில் மாற்றம் செய்யப் பட்டு ஆரம்பிக்கப்பட்டது. இந்த வங்கியின் பங்குகளில் சிலவற்றை 'சாட்டட் வங்கி' கொள்வனவு செய்ததுடன், ஏனைய பங்குகளை காப்புறுதிக் கூட்டுத்தாபனமும், பெற்றோலியக் கூட்டுத்தாபனமும், பொதுமக்களும் கொள்வனவு செய்தனர்.

1888 இல் ஆரம்பமான ஹட்டன் வங்கியையும் 1892 இல் ஆரம்பிக்கப் பட்ட நெஷனல் கிரீன்லண்ட்ஸ் வங்கியையும் ஒன்றிணைத்து 1970 இல் 'ஹட்டன் நெஷனல் வங்கி' ஆரம்பிக்கப் பட்டது. தேசிய வர்த்தக வங்கியாக வங்கி நடவடிக்கையில் இறங்கிய இவ் வங்கியின் முதலீட்டாளர்களாக, 1947 இல் ஆரம்பிக்கப்பட்ட வரையறுக்கப் பட்ட பிரவுண் கம்பனியும் நெஷனல்- கிரீன்லண்ட்ஸ் வங்கியும் பொதுமக்களும் இணைந்தனர். இவ்வங்கியும் விவசாயம், கைத்தொழில், உல்லாசப் பயணத்துறை, சர்வதேச வர்த்தகம் போன்றவற்றின் அபிவிருத்தியை நோக்காகக் கொண்ட நான்கு தேசிய வங்கிகளில் ஒன்றாகப் பரிணமித்தது.

1971 இன் 29 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தின் பிரகாரம் 1972 இல் 'தேசிய சேமிப்பு வங்கி' ஆரம் பிக்கப்பட்டது. இதுவரை இயங்கி வந்த சேமிப்புத் தாபனங்கள் பல இவற்றோடு ஒன்றிணைக்கப்பட்டன. இலங்கை வங்கி வரலாற்றிலேயே சேமிப்புத்திட்டத்திற்காக, 1932 இல் 'இலங்கை சேமிப்புத் திட்டம்' என்ற பெயரில் வங்கியொன்று ஆரம்பிக் கப்பட்டது. 1885 இல் 'தபாற்கந்தோர் சேமிப்புத் திட்டம்' ஆரம்பிக்கப்பட்டது. மிகச்சிறிய தொகையிலிருந்து வைப்பிலிடக்கூடிய நிறுவனமாக இது ஆரம்பிக்கப்பட்ட போதிலும் பணமீட்பின் போது, அதிக தொகையாக இருப்பின் ஓரிரு நாட்களுக்கு முன்னரே தபாற்கந்தோருக்கு அறிவிக்க வேண்டிய முறையொன்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

1938 இல் தபால் திணைக் களத்தால் சேமிப்புச் சான்றிதழ் முறையொன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன்படி, சேமிப்புச் சான்றிதழ் வழங்கப் பட்டதோடு, அவை முதிர்வடையும் காலத்தில் பணமாக் கிக்கொள்ளும் முறையில் இத்திட்டம் அமைக்கப்பட்டிருந்தது. இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் 1942 இல் தேசிய சேமிப்புத் திட்டமொன்று ஏற்படுத்தப்பட்டு, 1945 இல் ஆரம்பிக் கப்பட்டுள்ளது. தேசிய சேமிப்பு வங்கி முறையில் சீர்திருத்தத்தின்போது மேற்படி சகல சேமிப்பு முறைகளும் ஒன்றிணைக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது.


1972 இல் இலங்கை வங்கியானது, கிராமிய மட்டத்தில் வங்கிச் சேவையை விருத்தி செய்வதற்கென சகல விவசாய விஸ்தரிப்பு நிலையங்களிலும் வங்கிக் கிளைகளை ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது. 1975 இல் 13 ஆம் இலக்க ஈட்டு-முதலீட்டு வங்கிச் சட்டத் தின் பிரகாரம் முதலீட்டு வங்கி ஆரம் பிக்கப்பட்டதுடன், 1931 இல் ஆரம்பிக்கப்பட்ட அரச ஈட்டு வங்கியும் 1943 இல் ஆரம்பிக்கப்பட்ட விவசாய- தொழில்நுட்பக் கடன் நிறுவனமும் இதனோடு இணைக்கப்பட்டு, நிலம், கட்டடம் விலைக்கு வாங்குதல், நிர்மாணித்தல் போன்றவற்றிற்காகக் கடன் வழங்குவதை நோக்காகக் கொண்டியங்கியது.

1977 இல் ஏற்பட்ட திறந்த பொருளாதார முறை காரணமாக, இலங்கையில் சர்வதேச வங்கிக் கிளைகள் பல ஆரம் பிக்கப்பட்டதோடு, தேசிய வங்கிகள் இவற்றோடு போட்டி மனப்பாங்கில் இயங்கி வேண்டிய சூழ்நிலை உருவானது. 1978 இல் மக்கள் வங்கி, மீன்பிடித்தொழிலை அபிவிருத்தி செய்யும் நோக்கில், மீன்பிடித்துறைப் பிரதேசங்களில் தமது கிளைகளை நிறுவி, மீன்பிடிக் கைத்தொழில் அபிவிருத்திக்கான கடன் வழங் கும் திட்டத்தை ஆரம்பித்தது. 1977 முதல் 1982 வரை வங்கித்துறையானது சர்வதேச வங்கிக் கிளைகளோடு வியாபித்து, இன்றுவரை அதிகமான சர்வதேச வங்கிக் கிளைகள் நாட்டின் பல பாகங்களிலும் திறந்து வைக்கப்பட்டுள்ளதுடன், நமது தேசிய வங்கிகளின் கிளைகள் பல நாடுகளிலும் ஆரம்பிக்கப்பட்டு வங்கிச் சேவை துரிதமாக்கப்பட்டது.

இன்றைய நிலையில் வங்கிச் சேவை யானது மக்களுக்கு மிக அத்தியாவசிய தேவையாகக் கருதப்படுகின்றது. சகல வங்கிகளும் கடன் அட்டை முறைகளை ஏற்படுத்தியுள்ளதோடு, மக்களின் வசதி கருதி ATM அட்டைகளை உபயோகித் துப் பணம் பெற்றுக்கொள்ளும் இலகு வழிமுறைகளை உருவாக்கி வைத்தன. அத்துடன், மின்சார, நீர் கட்டணங்களை வங்கிகள் ஏற்கும் முறையொன்றும் செயல்படுத்தப்பட்டுள்ளது. கணினித் துறையின் வளர்ச்சி காரணமாக, கொடுக்கல் வாங்கல்களை நாட்டின் எந்த வங்கிக் கிளைகளிலும் செய்து கொள்ளும் முறை செயல்படுத்தப்படு கின்றது. வெளி நாடுகளிலிருந்து வரும் பணத்தை சுலபமாகவும் துரிதமாகவும் பெற்றுக்கொள்ளக்கூடிய முறையில் வங்கிகள் இன்று இயங்கிக் கொண்டிருக் கின்றன. சில வங்கிகள் விமான டிக்கெட்டுக் களைப் பெற்றுக்கொடுப்பதோடு, ஹோட்டல் வசதிகளையும் செய்து கொடுக்கும் முறையை ஏற்படுத்தி யுள்ளன. உள்நாட்டு வர்த்தகர்களுக் கும் தமது வாடிக்கையாளர்களுக் கும் ஏற்றுமதி-இறக்குமதி நடவ டிக்கைகளை மேற்கொள்ள உதவு கின்றன. தவிர, சகல வங்கிக் கிளை களும் போட்டி போட்டுக்கொண்டு, தங்க ஆபரணங்களுக்கான கடன்களை வழங்கிக்கொண்டிருக் கின்றன. பண்டிகைக் காலங்களின் போது, பரிசில்களை வழங்கியும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை ஏற்படுத்தியும் மக்கள் பணத்தை வங்கிகளில் முதலீடு செய்வதற் கான ஊக்குவிப்புகளைச் செய்து வருகின்றன. சில வங்கிகள் அதிக புள்ளிகளைப் பெறும் புலமைப் பரிசில் மாணவர்களுக்கான உதவித் தொகைகளையும் வழங்கிக் கொண்டிருக்கின்றன.

-செம்மைத்துளியான்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புர்கினா ஃபெஸோ





தலைநகரின் ஒருபக்கத் தோற்றம்


தலைநகரிலுள்ள நினைவுச்சின்னம்


தேசிய இலச்சினை

**உயர் சிகரம்:** டெனா கௌரோன். (2,451 அடி)
**நிலப்பிரிவுகள்:** 45 மாகாணங்கள்.
**சனத்தொகை** (2010): 16, 241,811.
**மொழிகள்:** பிரெஞ்ச் (உத்தியோக பூர்வ மொழி) மற்றும் தேசிய ஆபிரிக்க மொழிகள் (சூடானிக்) 90%.
**இனக்குழுக்கள்:** மோஸி (40% க்கு மேல்), குருன்சி, செனுபோ, லோபி, போபோ, மண்டே, ஃபுலானி.
**சமயங்கள்:** இஸ்லாம் 50%, உள்ளூர் மதநம்பிக்கைகள் 40%, கிறிஸ்தவம் (குறிப்பாக ரோமன் கத்தோலிக்கம்) 10%.
**எழுத்தறிவு** (2006): 21.8%
**நாணயம்:** CFA ஃபிரேங்.
**இணையத்தளக் குறியீடு:** .bf
**தொலைபேசிக் குறியீட்டு இலக்கம்:** 226

**அரசு:** நாடாளுமன்ற ஜனாதிபதிக் குடியரசு.
**சுதந்திரம்:** பிரான்ஸிடமிருந்து ஓகஸ்ட் 5, 1960.
**தேசிய விடுமுறை தினம்:** குடியரசு தினமாகிய டிசம்பர் 11 ஆம் திகதி.
**அதிபர்** (1987): பிளய்ஸ் கோம்போரே.
**பிரதமர்** (2007): டேர்டியஸ் ஸொன்கோ.

## புவியியல்

மேற்காபிரிக்காவின் ஏழை நாடு. நாட்டில் நிலவும் வறட்சியும் அதிக மக்கள் தொகையும் இந்நாட்டின் முக்கிய சிக்கல்களாக இருக்கின்றன. புர்கினா ஃபெஸோ முன்னர் 'அப்பர் வோல்டா' என அழைக்கப்பட்டது. முற்றிலும் நிலப்பகுதியால் சூழப்பட்ட இந்நாட்டின் அயல்நாடுகளாக கோட் டி ஐவரி, மாலி, நைகர், பெனின், டோகோ மற்றும் கானா ஆகிய நாடுகள் அமைந்துள்ளன. பரந்து விரிந்த சமவெளிகளும் உயரம் குறைந்த மலைகளும் உயர்நில சவன்னா புல்வெளிகளும் காணப்படுவதோடு, வடக்கே பாலைவனமும் அமைந்துள்ளது. கறுப்பு வோல்டா, சிவப்பு வோல்டா, வெள்ளை வோல்டா ஆகியன நாட்டின் முக்கிய ஆறுகளாகும்.
**மொத்தப் பரப்பு:** 105,869 ச.மைல் (274,200 ச.கி.மீற்றர்).
**நிலப்பரப்பு:** 105,714 ச.மைல் (273,799 ச.கி.மீற்றர்).
**தலைநகரமும் பெரிய நகரமும்:** வகாடுகு.

**தேசிய கீதம்**
Contre la férule humiliante il y a déjà mille ans,
La rapacité venue de loin les asservir il y a cent ans.
Contre la cynique malice métamorphosée
En néocolonialisme et ses petits servants locaux.....என
ஆரம்பமாகின்றது.


நாட்டின் இரண்டாவது பெரிய நகரிலுள்ள பிரதான பள்ளிவாசல்


மரக்கறி விளைநிலம்

## வரலாறு

புர்கினா ஃபெஸோவானது போபோ, லோபி, குருன்சி இன மக்களின் பூர்வீக இருப்பிடமாகும். 14 ஆம் நூற்றாண்டில் மோஸி மற்றும் குர்மா இன மக்கள் இடம்பெயர்ந்து இங்கு வந்து குடியேறினர். அதுவரை மோஸி பேரரசால் ஆளப்பட்டு வந்த இந்நாடு, 1897 இல் பிரான்ஸ் நாட்டின் ஆளுகையின்கீழ் வந்தது. 1903 இல் பிரான்ஸ் அயலிலுள்ள ஏனைய இனக்குழுக்களையும் இணைத்துக்கொண்டு அப்பர் வோல்டா எனும் பெயரில் தனது ஆதிக்கத்தைச் செலுத்தியது. பின்னர் 1919 இல் தனித்துவமான பிரெஞ்ச் காலனியாகவும் 1932 இல் நைகர், சூடான், கோட் டி ஐவரி ஆகிய நாடுகளை இணைத்து பரந்த பிரெஞ்ச் காலனியாகவும் உருவாக்கப்பட்டது. 1960 ஓகஸ்ட் 5 ஆம் திகதி பிரான்ஸின் ஆதிக்கத்திலிருந்து சுதந்திரமடைந்தது. 1966 ஜனவரி 3 ஆம் திகதியிலிருந்து ராணுவ ஆட்சி. 1984 இல் அதுவரை 'அப்பர் வோல்டா' என்றிருந்த நாட்டின் பெயர் 'சத்தியவான்களின் நாடு' என்று பொருள்படுமாறு 'புர்கினா ஃபெஸோ' என்றானது.


ஜனாதிபதி


பிரதமர்









## கலாசாரம்

மேற்கு ஆபிரிக்கர் அனைவரும் இந்நாட்டின் கலாசாரத்தை 'புர்க்கினாபி கலாசாரம்' என்றே அழைக்கின்றனர். புர்க்கினாபி கலாசாரத்தில் இரண்டு விடயங்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. ஒன்று நடனம். மற்றையது மாறுபட்ட முகமூடிகள். கடவுளுக்குரிய சடங்குகள், கிரியைகளைச் செய்யும்பொழுதும் மிருகங்களைப் பலியிடும்பொழுதுமே முகமூடிகளை அணிவர். அத்துடன், உள்ளூர் பாரம்பரிய நடனங்கள் மிகவும் பிரசித்தி பெற்றன.

## காலநிலை

பொதுவாக நாட்டின் காலநிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறட்சியான காலமாகிய மார்ச் முதல் மே வரை நாள்தோறும் உச்ச வெப்பநிலை நிலவும். ஜூன் முதல் ஒக்டோபர் வரையான காலம் நன்கு மழை பொழியும் மாரி காலமாகும்.

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்** (2005): பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள் 97,400. செல்லிடத் தொலைபேசிகள்: 572,200. **வானொலி நிலையங்கள்** (2002): AM 3, FM 17, SW 3. **தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள்** (2002): 1. **இணையத்தள வழங்குனர்கள்:** 442; இணையத்தளப் பாவனையாளர்கள்: 64,600.

## போக்குவரத்து

**புகையிரதப் பாதைகள்** (2004): மொத்தம் 622 கி.மீற்றர். **பெருந்தெருக்கள்** (2004): மொத்தம் 15,272 கி.மீற்றர் (இதில் செப்பனிடப்பட்டவை 4766 கி.மீ, செப்பனிடப்படாதவை 10,506 கி.மீ). **விமான நிலையங்கள்** (2006): 34.


கார் ஃபிகெலா நீர்வீழ்ச்சி

## பொருளாதாரம்

**விவசாயம்** (பயிர்ச்செய்கை நிலம் 14%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** பருத்தி, தானியங்கள், கால்நடை.
**தொழிலாளர் தொகை**(2003): 5 மில்லியன் (இதில் விவசாயம் 90%, கைத்தொழிலும் சேவைகளும் 10%). **வேலையற்றோர்:** 77%.
**கைத்தொழில்கள்:** நெசவுத் தொழில், பானவகைகள், விவசாய உற்பத்திப் பொருட்கள், சவர்க்காரம், புடவை, தங்கம் அகழ்தல்.
**இயற்கை வளங்கள்:** மங்கனீஸ், சுண்ணக்கல், பளிங்கு, தங்கம், உப்பு. **ஏற்றுமதிகள்** (2009): பருத்தி, கால்நடை, தங்கம்.
**இறக்குமதிகள்** (2009): மூலப்பொருள், உணவுப் பொருட்கள், பெற்றோலியம்.
**முக்கிய வர்த்தகப் பங்காளிகள்** (2004): சீனா, சிங்கப்பூர், கானா, பங்களாதேஷ், பிரான்ஸ், கோட் டி ஐவரி, டோகோ.


நாட்டின் தென்பகுதியிலுள்ள பாரம்பரிய வீடுகள்

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில...

- மோரோ-நபா மாளிகை
- புர்கினா ஃபெஸோ தேசிய நூதனசாலை
- கார்ஃபிகெலா நீர்வீழ்ச்சி
- சாபு
- La Place du Grand Lyon நினைவுத்தூபி
- காபோ டெம்பி
- Bangr-Weoogo நகர்ப்பூங்கா
- சின்டு கற்பாறை உருவாக்கம்
- L'Unite Pedagogique பூங்கா
- நாபா கூம் சிலை.

***மரக்கிளைகளில் அல்லது கட்டடங்களில் சிறிய பறவைகள் கூடுகளைக் கட்டி வாழ்வதைப் பார்த்திருப்பீர்கள். இவையெல்லாம் நாம் அறிந்திருக்கும் சில சாதாரண பறவையினங்களின் கூடுகளாகும். ஆனால், இந்த உலகில் வாழும் பறவையினங்களில் நாம் அறியாத எண்ணற்ற பறவையினங்கள் முற்றிலும் வித்தியாசமான முறையில் தங்களது கூடுகளை அமைத்துக்கொள்கின்றன.***



# பறவைகளின் கூடுகளும் அற்புதமே!



அந்தவகையில் பறவைகள் தாம் வாழும் இயற்கைச் சூழலுக்கு ஏற்ப, தங்கள் கூடுகளைக் கட்டிக்கொள்கின்றன. கடற்கரையோரம் வாழும் பறவையினங்கள் கடல் நீரின் மேற்பரப்பில், மூழ்கி விடாதபடி, தமது கூடுகளை அமைத்துக் கொள்கின்றன. கடல்நீரின் மட்டம் அதிகரித்தாலும் நீரில் கூடுகள் மூழ்காத வகையில் அதற்குரிய பொருட்களைக் கொண்டு அப்பறவைகள் தமது கூடுகளை உருவாக்கிக் கொள்கின்றன.

அனேகமாக, பறவைகள் இத்தகைய கூடுகளை உருவாக்கும் திறன் கொண்டதாகவே இருக்கின்றன. மேலும், அவற்றுக்கு எவ்வாறு கூடு கட்ட வேண்டும் என யாரும் பயிற்சியளிக்க வேண்டிய அவசியம் இல்லை. எல்லாம் இயற்கையாகவே நடைபெறுகின்றன. பறவைகள் நீண்டகாலமாக கூடுகட்டும் முயற்சியை மேற்கொண்டு, நீரில் மூழ்காத கூடுகளை உருவாக்கியிருக்கலாம் எனக் கற்பனை செய்து பார்த்தோமாயின், பறவைகள் எடுக்கும் முதல் முயற்சியிலேயே, அவற்றின் கூடுகள் கடல் நீரில் மூழ்கிப் போயிருக்கும். எப்படியிருப்பினும், அது போன்ற செயல் ஒருபோதும் நடைபெறவில்லை. ஏனெனில், இவ்வுலகில் பறவைகள் தோன்றிய முதல் நாளிலிருந்தே மேலே குறிப்பிட்ட அதே முறையில்தான் தங்களது கூடுகளை உருவாக்கி வருகின்றன.





சதுப்பு நிலப்பகுதியில் வாழும் பறவையினங்கள், தங்கள் கூடுகளின் சுவர்களை சற்று உயரமாக அமைத்துக்கொள்கின்றன. அவை இடும் முட்டைகள், வேகமாக காற்று வீசும்போது கீழே விழுந்து விடாமல் இருக்க, இந்த முறையைக் கையாள்கின்றன.

முட்டைகள் கீழே விழுவதன்மூலம் உடையக்கூடிய அபாயம் உண்டு என்பதை உணர்ந்து, தங்கள் முட்டைகளை முழுக் கவனத்துடன் பாதுகாக்க வேண்டும் என்னும் அறிவு இச்சிறிய பறவைகளுக்கு எவ்வாறு வந்தது? பறவைகள் இயற்கையுடன் இணைந்து மதிநுட்பமுள்ள ஒரு முன்னெச் செரிக்கை நடவடிக்கையை மேற்கொள்வதையே இங்கு காண்கின்றோம்.

சதுப்பு நிலப்பகுதியில் வாழும் மற்றொரு பறவையினம், நிலத்தைவிட்டுப் புதர்களில் தனது கூட்டினை அமைத்துக்கொள்கின்றது. அவ்வாறு அது புதர்களில் தனது கூட்டினை அமைத்துக்கொள்ள வேண்டிய காரணம் என்னவெனில், நிலத்திற்கும் புதருக்கும் இடையேயுள்ள தட்பவெப்பநிலை நிலத்தில் இருக்கும் வெப்பநிலையைவிட, பத்து டிகிரி சென்ரிகிரேட் குறைவாக இருப்பதேயாகும். இந்த விபரம் நம்மில் அநேகருக்குத் தெரியாது. ஆனால், இச்சிறிய பறவைகள் இதனை அறிந்து தங்களையும் தங்களது குஞ்சுகளையும் வெப்பநிலையிலிருந்து பாதுகாத்துக்கொள்ளவென நிலத்தை விட்டு குளிர்ந்த வெப்பநிலை உள்ள புதர்களில் தங்கள் கூடுகளை அமைத்துக் கொள்கின்றன.

ஐந்தறிவு மாத்திரமே உள்ள பகுத்தறியும் திறன் இல்லாதவை என நாம் கருதிக்கொண்டிருக்கும் இச்சிறிய பறவைகள், எவ்வாறு இத்தகைய நேர்த்தியான திறமைகளைக் கொண்டிருக்கின்றன. அனைத்தும் இயற்கையின் அதிசயமே!

**எம்.என்.எம்.திஷான்**




## தேசிய உற்பத்தித்திறன் செயலகம்

## தொழிற்தொடர்பு, மனிதவள அமைச்சு

NPS SRI LANKA

விஜய்

# உற்பத்தித்திறன் ஓவியப் போட்டி - 2010

## வினைத்திறனை வீட்டிலிருந்து ஆரம்பிப்போம்

அரச நிறுவனமாகிய தேசிய உற்பத்தித் திறன் நிறுவனமானது இம்முறையும் 2010 ஆம் ஆண்டிற்கான சித்திரப் போட்டியை நடத்துகின்றது.

**'வினைத்திறனை வீட்டிலிருந்தே ஆரம்பிப்போம்'** என்ற தலைப்பிலேயே இந்த சுவரொட்டி (போஸ்டர்) சித்திரப் போட்டி நடத்தப்படுகின்றது. நமது வீட்டில் வினைத்திறனை ஒழுங்காக கடைப்பிடித்தால்தான் நமது பாடசாலை, காரியாலயம் சமூகம் நாடு போன்றவற்றையும் வினைத்திறன் மிக்கதாக ஆக்கமுடியும். எனவே, வீட்டில் வினைத்திறனை மேற்கொண்டால் அது நாட்டின் மேம்பாட்டிற்கும் பயன்மிக்கதாக அமையும்.

எனவே, கீழ் காணப்படும் அம்சங்களைக் கவனத்தில் கொண்டு உங்களுடைய சுவரொட்டி சித்திரத்தை வரையமுடியும்.

1. வீட்டுத்தோட்டம் வினைத்திறன் மிக்க இடமாக எடுத்துக்காட்டி சித்திரம் வரையலாம்.
2. உங்களுடைய வீட்டை முறையாக அமைத்து இருக்கின்ற இட வசதிக்குள் கூடிய பயனைப் பெறுவதைக் காட்டும் சித்திரமாக அமையலாம்.
3. வீட்டின் பாதுகாப்பை எடுத்துக்காட்டும் விதமான சித்திரம்.
4. வீட்டின் அவசியமற்றவற்றை அப்புறப்படுதலும் அவசியமானவற்றை ஒழுங்குபடுத்தி சீராக வைத்தல்.
5. வீடானது சுத்தமும் சுகாதாரமும் மிக்கதாக இருப்பதான உணர்வை ஏற்படுத்தும் விதமான சித்திரம்.
6. வீட்டில் பொருளாதார ஸ்தீர நிலையானது, உயர்ந்த பழக்கவழக்கங்களை ஏற்படுத்தும் என்பதை விளக்குதல்.
7. வாழ்க்கையை இயல்பான தன்மை மிக்கதாக எடுத்துக்கொள்ளத்தக்க வழிமுறைகளை காட்டும் சித்திரங்கள்.
8. வீட்டில் நிதி கையாளுகை மற்றும் சிக்கனத்தை உணர்த்தும் சித்திரங்கள்.
9. நமது கலாசாரத்தைப் பாதுகாப்பதை உணர்த்தும் சித்திரங்கள்.

**இப்போட்டி 5 பிரிவுகளாக நடத்தப்படும்**

1. பாடசாலை மட்டம் - தரம் 1 தொடக்கம் 5 வரை
2. பாடசாலை மட்டம் - தரம் 6 தொடக்கம் 11வரை
3. பாடசாலை மட்டம் - தரம் 12 தொடக்கம் 13 வரை
4. பல்கலைக்கழக மட்டம் - பல்கலைக்கழக மாணவர்கள்
5. பகிரங்க மட்டம் - இலங்கையர் அனைவரும் கலந்து கொள்ளலாம்.

**ஓவியத்தின் அளவு**

அளவு - 18x24 அங்குலம்

'பிரிஸ்டல் போர்ட்' அல்லது ஓவியம் வரைவதற்கு பயன்படுத்தும் அட்டைகள், தாள்கள் எதையாவது பயன்படுத்தலாம்.

மொழி - தமிழ், சிங்களம், ஆங்கிலம்

**பரிசு விபரம்**

**பாடசாலை பிரிவு 1 மற்றும் 2**

1 ஆவது பரிசு - ரூபா 15,000 மற்றும் சான்றிதழ்
2 ஆவது பரிசு - ரூபா 10,000 மற்றும் சான்றிதழ்
3 ஆவது பரிசு - ரூபா 7,500 மற்றும் சான்றிதழ்

**பாடசாலை பிரிவு 3**

1 ஆவது பரிசு - ரூபா 20,000 மற்றும் சான்றிதழ்
2 ஆவது பரிசு - ரூபா 15,000 மற்றும் சான்றிதழ்
3 ஆவது பரிசு - ரூபா 10,000 மற்றும் சான்றிதழ்

**பல்கலைக்கழக மட்டம்/பகிரங்க மட்டம்**

1 ஆவது பரிசு - ரூபா 30,000 மற்றும் சான்றிதழ்
2 ஆவது பரிசு - ரூபா 20,000 மற்றும் சான்றிதழ்
3 ஆவது பரிசு - ரூபா 15,000 மற்றும் சான்றிதழ்

மேற்குறிப்பிட்ட வெற்றியாளர்களுக்கு மட்டுமன்றி தேர்வு செய்யப்படுகின்ற ஏனைய ஓவியங்களுக்கும் திறமைச் சான்றிதழ் வழங்கப்படும்.

உங்களது ஓவியங்களை உங்கள் பகுதிக்குரிய பிரதேச செயலகத்தின் தொழிற்தொடர்பு மற்றும் மனித வள அமைச்சின் உதவியாளரிடமும் கையளிக்கலாம்.

**போட்டி விதிமுறைகள்**

1. அனுப்பப்படுகின்ற ஓவியம் சொந்தப் படைப்பாக இருத்தல் வேண்டும்.
2. ஒருவர் எத்தனை ஓவியங்களையும் அனுப்பலாம். ஆனால், ஒன்றுக்கு மட்டுமே பரிசு வழங்கப்படும்.
3. பாடசாலை மாணவர்கள் தத்தமது பாடசாலை அதிபரின் மேற்பார்வையின் கீழ் ஓவியங்களை அனுப்பி வைத்தல் வேண்டும்.
4. பாடசாலை மட்டத்தில் அரச, தனியார் மற்றும் சர்வதேச பாடசாலை மாணவர்களும் கலந்து கொள்ள முடியும்.
5. சகல பல்கலைக்கழக மாணவர்களும் கலந்து கொள்ளலாம்.
6. பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரும் தம்மை உறுதி செய்தல் வேண்டும்.
7. போட்டியாளர்கள் தமது ஓவியத்தின் பின்புறத்தில் இங்கு வழங்கப்பட்டுள்ள மாதிரிக் கூப்பனை ஒத்த கூப்பன் ஒன்றினைத் தயாரித்து நிரப்பி ஒட்டுதல் வேண்டும்.
8. போட்டிக்கு அனுப்பப்படும் ஓவியங்கள் அனைத்தும் நடுவர் குழுவொன்றினால் தேர்ந்தெடுக்கப்பட்டு பார்வைக்கு வைக்கப்படும். நடுவர் குழுவின் முடிவே இறுதித் தீர்ப்பாகும். வெற்றி பெறுவோருக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் கொழும்பில் வைத்து வழங்கப்படும்.
9. நடுவர் குழுவினால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற ஓவியங்கள் மற்றும் இவற்றை பிரசுரிக்கும் உரிமையோ, தேவை கருதி அவற்றைப் பயன்படுத்தும் உரிமையோ தேசிய உற்பத்தித் திறன் செயலகத்திற்கே உரித்துடையதாகும்.

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

1. i. மாவட்டம் ..................
போட்டிப் பிரிவு ..................
2. i. முதல் பெயர் ..................
(ஆங்கில தனியெழுத்தில்)
ii. முழுப் பெயர் ..................
3. i. முகவரி ..................
(ஆங்கில தனியெழுத்தில்)
..................
..................
ii. தொலைபேசி ..................
4. வயது ..................
5. i. பாடசாலையின் பெயர்/முகவரி
..................
..................
ii. வகுப்பு (தரம்) ..................
6. பல்கலைக்கழக மாணவர்களாயின்
i. பல்கலைக்கழகத்தின் பெயர்
..................
ii. கல்வி கற்கும் பிரிவு (பீடம்)
..................

..................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

**மேற்கூறப்பட்டுள்ள விபரங்கள் முற்றிலும் உண்மையானவையே என உறுதிப்படுத்துகின்றேன்.**

..................
பாடசாலை அதிபர்/பீடாதிபதி
(கையொப்பம்/றப்பர் முத்திரை)

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 2010.10.15**
**அனுப்ப வேண்டிய முகவரி :**
**பணிப்பாளர்,**
**தேசிய உற்பத்தித்திறன் செயலகம்,**
**இல 318, ஹைலெவல் வீதி, கொழும்பு-06.**

ஊடக அனுசரணை: விஜய்

பரிசு அனுசரணை: O-KAY

மேலதிக விபரங்களுக்கு:- தொலைபேசி 011-2812163/6, ஃபெக்ஸ்: 011- 2812162, மின்னஞ்சல் - nposl@nps.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் II

பெயர்: ........................................................ நேரம்: 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

01. பின்வரும் பந்தியை வாசிக்க.

> வெயில் தணிந்தது. வானம் மப்பும் மந்தாரமுமாய் இருந்தது. திடீரென மரங்கள் அசைந்து ஆடின. சாதாரணமாக வீசிய காற்று பலமாக வீசத் தொடங்கியது. தூசுகள், கடதாசிகள் எல்லாம் மேலே பறந்தன. மரங்கள் சரிந்து சரிந்து ஆடி இயலாமல் முறிந்தன. கூரைத்தகடுகள் காற்றில் பறந்தன. மழையும் பெய்யத் தொடங்கியது. ''ஓ.... ஓ'' என்ற சத்தத்துடன் காற்று புயலாக மாறியது.

★ **கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் பந்தியிலிருந்து தேர்ந்தெடுத்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

(i) இப்பந்தியில் எக்காட்சி பற்றிக் கூறப்பட்டுள்ளது?..............................

(ii) ஆகாயம் என்பதன் ஒத்த கருத்துச்சொல்லை எழுதுக?..............................

(iii) காற்று எவ்வாறு புயலாய் மாறியது?..............................

(iv) 'மரம் அசைந்து ஆடியது' என்னும் வாக்கியத்தை பன்மையாக மாற்றுக.

..............................

(v) 'வீட்டுக்கூரை' என்பதைப் பிரித்து எழுதுக. ..............................

(vi) 'கூரைத்தகடுகள் காற்றில் பறந்தன' என்னும் வாக்கியத்தை நிகழ்காலத்தில் மாற்றி எழுதுக..............................

02. அடைப்புக்குள் இருக்கும் சொற்களிலிருந்து பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்து, வெற்றிடத்தை நிரப்புக.

(i) இன்று வைத்திய .............................. நடைபெறும்.
(பறிசோதணை/பரிசோதனை/பரிசோதணை)

(ii) ஐந்தாம் திகதி .............................. வழங்கப்படும்.
(சீருடைத் துணிகள்/சீருடைத்துனிகள்/சிறுடைத்துணிகள்)

03. பொருத்தமான நிறுத்தற்குறிகளை இடுக.

(i) பெரியவரே உங்களுக்கு என்ன வேண்டும்

(ii) கடற்கரையில் சிறிய கற்கள் ஊரிகள் சிப்பிகள் ஆகியவற்றைச் சேகரித்தேன்

04. தரப்பட்டுள்ள வாக்கியத்தில் உள்ள எழுவாய், பயனிலை, அடைமொழிகள் என்பனவற்றை இனங்கண்டு எழுதுக.

★ ***நீலமயில் அழகிய தோகை விரித்து ஆடியது.***

(i) எழுவாய் ..............................

(ii) பயனிலை ..............................

(iii) எழுவாய் அடைமொழி ..............................

(iv) செயற்படுபொருள் அடைமொழி ..............................

05. சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியத்தை எழுதுக.

❋ நிகழ்ச்சிகளை/வேண்டும்/மட்டுமே/பயனுள்ள/பார்க்க/நமக்குப்/தொலைக்காட்சியில்

..............................

06. பின்வரும் பழமொழிகளின் கருத்தை எழுதுக.

(i) இளமையிற் கல்வி சிலையில் எழுத்து.

..............................

(ii) அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.

..............................

07. ஒவ்வொரு தமிழ்ச் சொல்லுக்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக.

(i) கரும்பலகை ..............................

(ii) வகுப்பறை ..............................

(iii) தபாற்கந்தோர் ..............................

08. கருத்தைத் தமிழில் எழுதுக.

(i) Happy New Year ..............................

(ii) Silence Please ..............................

(iii) I am reading a book ..............................

09. பின்வரும் ஒவ்வொரு சிங்கள வாக்கியத்தினதும் கருத்தைத் தமிழில் எழுதுக.

(i) ம(ட்)ட வ(த்)துர டிகக் (Dh)தென்ன.

..............................

(ii) தும்ரிய ஸ்தானய(ட்)ட யன்னே கொஹொம(Dh)த?

..............................

★ *10 தொடக்கம் 36 வரையுள்ள வினாக்களுக்கு நான்கு விடைகள் தரப்பட்டுள்ளன. சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.*

10. சித்திரைப் புத்தாண்டுக் காலத்தில் பூக்கும் தாவரம் எது?
(i) இலுப்பை (ii) வேம்பு (iii) வாகை (iv) மா

11. பூக்களில் தேன் பருக வரும் பிராணி எது?
(i) மயிர்கொட்டி (ii) கிளி (iii) தேன் (iv) நத்தை




12. தாவரங்களின் வேர்கள், தண்டுகளை அரிக்கும் பிராணி எது?
(i) செவ்வெறும்பு (ii) தேவாங்கு (iii) கரையான் (iv) ஆமை

13. இரவு வேளைகளில் இலைகள் சுருங்கும் தாவரம் எது?
(i) வாகை (ii) துளசி (iii) தூதுவளை (iv) இராவணன் மீசை

14 நாய், மூலிகையாக விரும்பி உண்ணும் தாவரம் எது?
(i) குப்பைமேனி (ii) தேங்காய்ப்பூக்கீரை (iii) வாழை (iv) பால்அறுகு

15. தரப்பட்டுள்ள மரங்களில் ஆணி வேருள்ள மரம் எது?
(i) பனை (ii) கமுகு (iii) தென்னை (iv) இலுப்பை

16. பலா இலையின் வடிவத்தை ஒத்த இலை எது?
(i) அகத்தி (ii) மரமுந்திரிகை (iii) ஈரப்பலா (iv) கொவ்வை

17. தேனைக் கொண்டிராத பூ எது?
(i) வாழைப்பூ (ii) மாம்பூ (iii) கடதாசிப் பூ (iv) பாலைப்பூ

18. ஆண்பூவும் பெண்பூவும் தனித்தனியாக காணப்படும் தாவரம் எது?
(i) தென்னை (ii) பப்பாசி (iii) இலுப்பை (iv) கொய்யா

19. அடி மரத்திலும் வேரிலும் காய்க்கும் மரம் எது?
(i) நெல்லி (ii) பலா (iii) இலுப்பை (iv) பப்பாசி

20. ஆறு இதழ்களைக்கொண்ட பூ எது?
(i) பவளமல்லிகை (ii) அலரிப்பூ (iii) கடதாசிப்பூ (iv) கரணைப்பூ

21. ஐந்து இதழ்களைக்கொண்ட பூ எது?
(i) திருவாத்திப்பூ (ii) எக்சோரா (iii) செவ்வரத்தைப்பூ (iv) கமுகு

22. கொள்ளை நோயைப் பரப்பும் பிராணி எது?
(i) நுளம்பு (ii) ஈ (iii) எலி (iv) குரங்கு

23. இலங்கைக்கு மட்டுமே உரித்தான பறவை எது?
(i) மயில் (ii) கிளி (iii) கொக்கு (iv) காட்டுச்சேவல்

24. நாய் தன் குட்டியை தூக்கிச் செல்ல கௌவுவது குட்டியின் எப்பகுதியில்?
(i) கால்களை (ii) வயிற்றுப்பகுதியை
(iii) கழுத்துப்பகுதியை (iv) காதுகளை

25. அணில் மரத்துக்கு மரம் தாவும்போது உடலின் சமநிலையைப் பேணுவது?
(i) உடல்நிறை (ii) மீசை (iii) வால் (iv) கால்கள்

26. தோலினால் சுவாசிக்கும் பிராணி எது?
(i) மீன் (ii) மண்புழு (iii) பன்றி (iv) சீல்

27. கூடு கட்டத் தெரியாத பறவை எது?
(i) காகம் (ii) கொக்கு (iii) பருந்து (iv) குயில்

28. கால்கள் இல்லாத பிராணி எது?
(i) தேள் (ii) மரஅட்டை (iii) நத்தை (iv) பூராண்

29. எட்டுக் கால்கள்கொண்ட பிராணி எது?
(i) எறும்பு (ii) அட்டை (iii) ஈ (iv) சிலந்தி

30. இரை மீட்கும் பிராணி எது?
(i) ஆடு (ii) நாய் (iii) பூனை (iv) பன்றி

31. ஆமை முட்டையின் நிறம் என்ன?
(i) கறுப்பு (ii) மஞ்சள் (iii) வெள்ளை (iv) கபிலம்

32. கடவுச்சீட்டு வழங்கும் திணைக்களம் எது?
(i) பிரதேச செயலகம் (ii) ஆட்பதிவுத் திணைக்களம்
(iii) குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் (iv) சுங்கத் திணைக்களம்

33. துவிச்சக்கர வண்டிக்கு அனுமதிப் பத்திரம் பெறுவதற்கு செல்ல வேண்டிய இடம்;
(i) பொலிஸ் நிலையம் (ii) பிரதேச சபை
(iii) சுங்கத் திணைக்களம் (iv) சமுர்த்தி அலுவலகம்

மிகுதி அடுத்த இதழில் வெளிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புவி வெப்பம் நாளுக்கு நாள் அதிகரிக்கின்றது

**புவி வெப்பமடைந்து வருவதன் காரணமாக, உலகில் நிகழும் காலநிலை மாற்றங்களையும் அதன்மூலம் ஏற்படும் தாக்கங்களையும் நாம் அடிக்கடி உணர்ந்து வருகின்றோம். இதன் ஒரு பாதிப்பாக, அண்மையில் பெய்த பருவ மழையினால் பாகிஸ்தானில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தைக் குறிப்பிடலாம். அதேபோன்று, ரஷ்யாவில் ஏற்பட்ட காட்டுத் தீ இன்றுவரை முற்றிலும் அணைந்தபாடில்லை. அங்கு நிலவும் வறண்ட காலநிலையே இந்தக் காட்டுத் தீ ஏற்படக் காரணமாகும். இதற்கிடையில் ஆர்க்டிக் வலயத்தில் பெரும் பனித்தட்டு ஒன்று பிளந்து கடலுடன் சேர்ந்துள்ளது. இதனால், கடல் நீர் மட்டம் உயர்ந்து தீவுகள் பல கடலில் மூழ்கும் அபாயம் உள்ளதாக விஞ்ஞானிகள் அச்சம் தெரிவிக்கின்றனர்.**


ரஷ்யாவில் காட்டுத் தீ தீவிரமடைகின்றது.


ரஷ்யப் பிரதமர் புட்டின் நீரை விசிறியடிக்கு விமானத்தினைச் செலுத்தும் காட்சி


ஐ.நா வின் செயலாளர் பான் கீ மூன் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பாகிஸ்தானியர்களை சந்தித்தபோது...

30 கி.மீ நீளமும் 10 கி.மீ அகலமும் கொண்ட அந்தப் பாரிய பனித்தட்டு கிறீன்லாந்தின் 'பீற்றர்மன்' எனும் பனிமலையிலிருந்தே பிளந்து சென்றுள்ளது. புவி வெப்பமடைந்து வருவதன் நேரடி அழுத்தம் காரணமாகவே, இந்த நிகழ்வு இடம்பெற்றதாக சூழலியலாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர். நாஸா நிறுவனத்தின் ஊடாக பெறப்பட்ட குறித்த பனித்தட்டின் செய்மதிப் புகைப் படத்தினை பரிசீலித்த விஞ்ஞானிகள், இந்தப் பனித்தட்டு சுமார் இரண்டு வருட காலத்திற்கு ஆர்க்டிக் சமுத்திரத்தில் மிதந்து கொண்டிருக்கும் என்று குறிப்பிட்டுள்ளனர். அத்துடன், கடல் நீர்மட்டம் உயர்வடைதலானது மாலைதீவு போன்ற சிறிய நாடுகள் கடலில் மூழ்கும் அபாயத்தை ஏற்படுத்தும் என்றும் கருதப்படுகின்றது.

இவ்வாறான பாரிய பனித்தட்டொன்று இதற்கு முன்னர் பிளந்து சென்று கடலில் மிதந்த சம்பவம் ஒன்று 1962 ஆம் ஆண்டு நிகழ்ந்தது. ஆனால், தற்போது கடலில் விழுந்துள்ள இந்தப் பனித்தட்டின் காரணமாக, ஆர்க்டிக் வலயத்தினைச் சேர்ந்த கடல் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள எண்ணெய் அகழ்வு மிதவைகளுக்கும் கடற் போக்குவரத்து செயற்பாடுகளுக்கும் பாதிப்பு ஏற்படும் என்று கெனடிய 'ஐஸ் சர்வீஸ்' பிரிவின் அதிகாரி ட்ரூட் வோலென்பென் என்பவர் கூறுகின்றார்.


இதற்கிடையில், வறண்ட காலநிலை காரணமாக, பல வாரங்களாக ரஷ்யாவில் பரவி வரும் காட்டுத் தீ கடந்த வாரம் மிகவும் தீவிரமான நிலையை அடைந்தது. ரஷ்யாவின் சரோவ் நகர அணுசக்தி நிலையத்தினை நோக்கி மேற்படி காட்டுத் தீ பரவும் அபாயம் ஏற்பட்டதை அடுத்து, கடந்த வாரம் அக்காட்டுத் தீ மேலும் பரவாமல் தடுப்பதற்காக 600 தீ அணைப்புப் படை வீரர்கள் தீயை அணைப்பதற்காகப் பெரும் முயற்சிகளில் ஈடுபட்டனர். ரஷ்யப் பிரதமரான விளாடிமிர் புடின் தீ அணைப்புப் படைவீரர்களுக்கு உதவும் முகமாக நீரை விசிறியடிக்கும் விமானத்தினைச் செலுத்தி அந்த முயற்சிகளுக்கு உதவி செய்தார். அத்துடன், தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக நீரைப் பீய்ச்சும் ஹெலிகொப்டர்களும் கொள்வனவு செய்யப்பட்டன. தற்போது, இந்தக் காட்டுத் தீ 174,000 ஹெக்டேயர் நிலப்பரப்பு வரை பரவி, பாரிய அழிவுகளை ஏற்படுத்தியுள்ளது. ரஷ்யாவின் விளைநிலங்கள் பல இத்தீயினால் முற்றாக சேதமடைந்துள்ளதுடன் இதனால், பாரிய பொருளாதார வீழ்ச்சியும் ஏற்பட்டுள்ளது.

அணுசக்தி நிலையம் அமைந்துள்ள சரோவ் நகரப்பகுதியானது, மொஸ்கோ நகரில் இருந்து 500 கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது. அங்கு காட்டுத் தீ பரவினால் அணுசக்தி வெடிப்பு ஏற்படக்கூடும் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டதையடுத்து, பல மணித்தியாலப் போராட்டத்தின்பின் இத் தீயணைப்பு வீரர்கள் அப்பகுதியில் பரவிய தீயை அணைத்துவிட்டனர்.

காட்டுத் தீயானது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதை அடுத்து, ரஷ்யாவின் மொஸ்கோ நகரை சூழ்ந்திருந்த விஷப்புகை விலகிச் சென்று கொண்டிருப்பதாக அந்நாட்டின் காலநிலை விஞ்ஞானப் பிரிவு தெரிவித்தது. இத்தீயினால் ஏற்பட்ட புகை காரணமாக, நகரின் விமானநிலையம் மூடப்பட்டிருந்ததுடன், விமானப் போக்குவரத்துக்களும் இடைநிறுத்தப்பட்டிருந்தன. நகரின் அன்றாட செயற்பாடுகள் யாவும் முற்றுமுழுதாக ஸ்தம்பிதமடைந்திருந்தன. மொஸ்கோ நகரில் ஏற்பட்ட இந்த அனர்த்தம் காரணமாக, 166,000 வரையான மக்கள் பாதுகாப்பான இடத்தினை நோக்கி அப்புறப்படுத்தப் பட்டமை குறிப்பிடக்கூடிய விடயமாகும். -(இ)


பாகிஸ்தானில் வெள்ளப்பெருக்கு







பனிமலையிலிருந்து உடைந்து விலகிச் சென்ற பெரும் பனித்தட்டு ஆர்க்டிக் சமுத்திரத்தில்

பனித்தட்டொன்று உடைந்து விலகுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்களுக்கும் நாவுக்கும்

# நோயை ஏற்படுத்

**உணவு வகைகள் எமது வாழ்க்கைக்கு இன்றியமையாதன. அவை நமது உடலின் வளர்ச்சிக்கும் பாதுகாப்புக்கும் அன்றாடப் பணிகளைச் செய்வதற்கான சக்தியையும் நமக்கு வழங்குகின்றன. ஆனால், இந்த நன்மைகள் அனைத்தும் நிறையுணவை உட்கொள்வதனூடாகவே கிடைக்கின்றன. மாறாக, நமது கண்களுக்கும் நாவுக்கும் மட்டும் விருந்தளித்து, ஆபத்தில் தள்ளிவிடும் உடனடி உணவுகளிலிருந்து எந்தவொரு நன்மையும் நமக்குக் கிடைப்பதில்லை**

இன்று பல்வேறு வகையில் பொதி செய்யப்பட்டதும் விரைவில் தயாரிக்கக்கூடியதுமான செயற்கை சுவையூட்டிகள் அடங்கிய கண்கவர் உணவுப் பண்டங்கள் விற்பனைக்குள்ளாவதைக் காணக்கூடியதாக உள்ளது. இவ்வாறான உணவு வகைகளை நாளாந்தம் உட்கொள்ளும் வழக்கத்தினைச் சிலர் கொண்டிருக்கின்றனர். விளம்பரத் தாள்கள், விளம்பர பதாகைகள், தொலைக்காட்சி விளம்பரங்கள் ஆகியன இந்த உணவுப்பண்டங்களை கொள்வனவு செய்வதற்கு பெரும்பாலும் தூண்டுதலாக அமைகின்றன. அநேகமாக, சிறுவர்களே இவ்விடயத்தில் பெரும்பாலும் தூண்டப்படுகின்றனர்; கவரப்படுகின்றனர்.

இத்தகைய உணவு வகைகளில் உள்ள குண நலன்கள் பற்றி சிறுவர்கள் அறிவதில்லை. அவர்கள் அதன் சுவை, அதன் கண்கவர் தோற்றம் போன்றவற்றையே கருத்திற்கொள்வர். இதற்கு பிரதான காரணம், அவை வாடிக்கையாளர்களின் மனதைக் கவரும் விதத்தில் விளம்பரப்படுத்தப்படுகின்றமை ஆகும். இந்த உணவுப் பண்டங்களில் சேர்க்கப்படும் ரசாயனப் பதார்த்தங்கள், சுவையூட்டிகள், நிறமூட்டிகள் என்பன சிறார்களின் ஆரோக்கியத்திற்கு மட்டுமன்றி, நம் அனைவரினதும் உடல் ஆரோக்கியத்திற்குக் கேடு விளைவிக்கும் தன்மை கொண்டவையாகும். இவற்றை உட்கொள்வதால் பல்வேறு நோய்களும் ஏற்படலாம். அவ்வாறு ஏற்படும் நோய்கள் சிலவேளை உயிராபத்தை விளைவிப்பதாகவும் இருக்கும்.

## நீங்கள் அருந்த விரும்புவது குளிர்பானமா? அல்லது தோடம்பழச்சாறா?



### குளிர்பானப் போத்தல்

- ★ கண் கவரும் விதத்தில் அடைக்கப்பட்டிருக்கும்.
- ★ பலதரப்பட்ட சுவை, நிறங்களில் கிடைக்கும்.
- ★ செயற்கை நிறமூட்டி, சுவையூட்டி அடங்கியிருக்கும்.
- ★ நீண்ட காலம் வைத்திருக்கக்கூடியது.
- ★ இதற்காக அதிக விளம்பரங்கள் செய்யப்படும்.
- ★ அதிக விலை.
- ★ எந்த இடத்திற்கும் எடுத்துச் செல்லக்கூடிய தன்மை.
- ★ இலகுவாகப் பயன்படுத்தலாம். வேலைப்பளு மிக்க வாழ்வுக்கு உதவும்.
- ★ அதிகளவு சீனி அடங்கியிருக்கும்.
- ★ அடிக்கடி அருந்துவதால் உடல் ஆரோக்கியம் கெடும்.

### ஒரு குவளை தோடம்பழச்சாறு

- ★ தேவையானபோது பழத்தினை பிழிந்து சாறாகப் பெறலாம். இதனால், நீண்ட பாவனைக்காக செயற்கை ஊட்டிகளைப் பயன்படுத்தத் தேவையில்லை.
- ★ இயற்கைச் சுவை, சத்துக்கள், கனியுப்புக்கள் கொண்டது.
- ★ தோடம்பழச்சாறு, நீர், உப்பு, சீனி கலந்து சுவையான பானம் தயாரிக்கலாம்.
- ★ குளிர்சாதனப்பெட்டியில் வைத்தும் அருந்தலாம்.
- ★ வீட்டிலேயே தயாரிக்கலாம். விளம்பரங்கள் தேவையில்லை.
- ★ தேவையான அளவு சீனி பயன்படுத்தலாம்.
- ★ உடல் ஆரோக்கியத்திற்குக் கேடு விளைவிக்காது.






சத்துணவுகள்

### உடலுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய உணவு வகைகள் சில...

நூட்ல்ஸ் வகைகள், சோயா வகைகள், சில யோகட் வகைகள், சுவையூட்டப்பட்ட பால், பான வகைகள், ஐஸ்கிறீம், சோஸ் வகைகள், டொபி வகைகள், ஜெலி வகைகள், சொசேஜஸ், செயற்கை சுவையூட்டிகள் அடங்கிய பேர்கர், (ச்)சிப்ஸ், கெபாப் உட்பட மேலும் பல உடனடி உணவுகள் (Fast foods) என்பனவும் இதில் அடங்கும். இவ்வாறான உணவு வகைகளில் சுவையை அதிகரிக்கவும் அவற்றை நீண்ட நாள் பதப்படுத்திப் பாதுகாக்கவும் என பல ரசாயனப் பதார்த்தங்கள் சேர்க்கப்படுகின்றன. இத்தகைய உணவுகளைத் தயாரிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருந்தளித்து, ——

# ...தும் உணவுகள்

போது பின்பற்றப்பட வேண்டிய தரக் கட்டுப்பாடுகள் சில சமயம் பின்பற்றப்படுவதில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## உணவின் இயல்புநிலை பாதிப்பு

உணவுப் பண்டங்களைத் தயாரிக்கும் தொழிற்துறையில் அந்த உணவுப் பொருட்களின் தொழில்நுட்பத் தரத்தினை மேம்படுத்துவதற்கென, அதாவது, நீண்ட நாட்கள் அந்த உணவுகளைப் பாதுகாக்கவும் அதனைக் கண்கவரும் விதத்தில் தயாரிக்கவும் சுவையை மேலும் அதிகரிக்கவும் என சில அமிலங்கள், ரசாயனங்கள் சேர்க்கப்படுகின்றன. இங்கு சில ரசாயனப் பதார்த்தங்கள், அமிலங்களைச் சேர்க்கும்போது குறித்த பண்டத்தில் இயல்பாக அமைந்துள்ள சத்துக்கள் அழிவடையலாம். இந்த நிலையில் அந்த உணவுகளை உட்கொள்வதனால் எந்தவொரு நன்மையும் ஏற்படுவதில்லை.

## இயல்புநிலை பாதிக்கப்பட்ட உணவுகளை உட்கொள்வதனைத் தவிர்த்தல்

சந்தைகளில், விற்பனை நிலையங்களில் விற்பனைக்கு இருக்கும் பலதரப்பட்ட உணவு வகைகளில் உயர் தரத்தினைப் பேணுவதற்காகவும் அதிகபட்ச இலாபத்தினை ஈட்டுவதற்காகவும் பல்வேறு ரசாயனங்கள் சேர்க்கப்பட



வேண்டிய தேவை உள்ளது. இந்த ரசாயனங்களால் ஏற்படும் சுகாதாரக் கேடுகளைத் தவிர்த்துக்கொள்ளவும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவும் உங்களால் முடியும். எனவே, இயலுமானவரை, இவ்வாறான உணவுகளை உட்கொள்வதைத் தவிருங்கள்.

இன்றைய காலத்தில் பெற்றோர்களும்கூட தங்கள் வேலைகளைக் குறைக்கும் நோக்கில் பிள்ளைகளுக்கும் இத்தகைய உடனடி உணவுகளை வாங்கிக்கொடுக்கும் வழக்கத்தினைக் கொண்டுள்ளனர். இதனால், சத்தாகாரங்களின் பக்கம் பிள்ளைகளின் நாட்டம் குறைகின்றது. இந்த உணவுகள் வெறும் சுவையை மட்டுமே கொண்டிருக்கின்றன. வயிற்றுப் பசியை அவை போக்கினாலும் உடலுக்கு சத்துக்கள் கிடைப்பது குறைவு. இதனால், பிள்ளைகள் பற்பல நோய்களுக்கும் ஆளாகின்றனர். போசணைக் குறைவு, வளர்ச்சி குன்றுதல், எலும்புகளில் உறுதியின்மை, உடற்பருமன் அதிகரிப்பு என்பன அவற்றுள் சிலவாகும்.



## உணவில் பாதிப்பை ஏற்படுத்தாதவை

கீழ்வரும் உணவுப் பண்டங்களில் சில பொருட்கள் சேர்க்கப்படுகின்றபோதிலும் அவை ரசாயனங்களாகக் கொள்ளப்படுவதில்லை. அவை கீழ்வருமாறு;

* விற்றமின்களும் கனியுப்புகளும்
* உணவுக்கு சுவை சேர்ப்பதற்காக, உள்ளடக்கப்படுகின்ற இயற்கைத் தாவரங்கள் (கறிவேப்பிலை, கொத்தமல்லி இலை போன்றன) மற்றும் பலசரக்குகள்.
* பூக்களின் பாகங்கள்
* உப்பு
* ஈஸ்ட்
* புரதங்கள்
* மோல்ட் மற்றும் மோல்ட் சுவையூட்டிகள்
* நீர் மற்றும் வளி

## செயற்கை நிறமூட்டிகளைப் பயன்படுத்தத் தடை

கீழ்வரும் உணவுகளுக்கு செய்கை நிறமூட்டிளைச் சேர்ப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

* சமைக்கப்படாத, தயாரிக்கப் படாத இறைச்சி வகைகள்.
* உணவாகக் கொள்ளப்படுகின்ற தயாரிக்கப்படாத பறவைகளின் இறைச்சி.
* மீன்கள், பழங்கள், காய்கறிகள், தேநீர், கோப்பிக்கொட்டை, தூளாக்கப்பட்ட கோப்பி, பாண், ஐஸ்கிறீம், கட்டிப்பால், உலர் பால்மா, (ச்)சீஸ், பட்டர்.
* குழந்தைகளுக்கான உணவு வகைகள்.

## உங்களுக்குத் தெரியுமா?

உணவுகளில் சேர்க்கப்படும் சுவையூட்டிகள், நிறமூட்டிகள், வாசனையூட்டிகள்





என்பன நிலக்கரியிலிருந்து பெறப்படும் தாரின் ரசாயனச் சேர்வைகளிலிருந்தே தயாரிக்கப்படுகின்றன. இவற்றில் புற்றுநோய் மூலக்கூறுகள் அதிகளவில் அடங்கியுள்ளன. பளிச்சென்ற நிறங்களில், அதிக சுவையுடன், அதிக வாசனையுடன் இருக்கும் உணவு வகைகளில் இந்த ரசாயனக் கலவைகள் அடங்கியுள்ளன. இவற்றில் தரக்கட்டுப்பாடு இருந்தாலும்கூட, இந்த உணவுகளை அதிகளவில் உட்கொள்வது நல்லதன்று.

## செயற்கை ஊட்டிகள் அடங்கிய உணவுகளால் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள்

இத்தகைய உணவுகளை உட்கொள்வதனால் பல ஆரோக்கிய சீர்கேடுகள் ஏற்படுகின்றன. அண்மைக்காலமாக, இலங்கையில் புற்றுநோய் ஏற்பட்டு இறப்போரின் தொகை அதிகரித்துச் செல்கின்றது. தவிர, பெரியோர்கள் மட்டுமன்றி சிறார்களும் நீரிழிவு நோய்க்கு ஆளாகி வருகின்றனர். சுவாச நோய்கள், இரத்த அழுத்த அதிகரிப்பு, இரத்தத்தில் கொலஸ்ட்ரோல் அளவு அதிகரிப்பு, சமநிலையற்ற ஹோர்மோன் செயற்பாடுகள்,உடல் எடை அதிகரிப்பு போன்ற ஆபத்துகளை ஏற்படுத்துவதில் இந்த உணவுகள் நேரடித் தாக்கத்தைச் செலுத்துகின்றன.

## செயற்கை உணவுகளை நாடுவதற்கான காரணங்கள்

உணவு தயாரிப்பதில் உள்ள இலகுத்தன்மை, அதிக வேலைப்பளு, சுவை, விளம்பரங்களினால் ஏற்படும் ஈர்ப்பு போன்ற காரணங்களினால் மக்கள் செயற்கையான உணவுகளில் அதிகம் நாட்டம் கொள்கின்றனர்.

எனினும், நீங்கள் உட்கொள்ளும் உணவு உங்கள் உடலுக்கு எவ்வளவு தூரம் பயன் தருகின்றது?, அது சிறந்த குணநலன்களைக் கொண்டதா?, அதில் உள்ளடங்கியுள்ளவை எவை? என்பன குறித்து புத்திசாலித்தனத்துடன் சிந்தித்துப் பார்ப்பது மிக அவசியமாகும்.

## எமது உணவுக் கலாசாரம்

இலங்கை ஒரு தெற்காசிய நாடு என்பதால் எமது பிரதான உணவாக சோறு விளங்குகின்றது. எனினும், கடைகளில் கிடைக்கும் செயற்கை உணவுகள் மீதான மோகம் அண்மைக்காலமாக நம் மத்தியில் அதிகரித்து வருகின்றது. இதனால் சோறு, காய்கறி, பழங்கள், கீரைவகைகள், பால்வகைகள், தானியவகைகள், அவரைவகைகள் என்பனவற்றை உள்ளடக்கிய நிறையுணவானது எமது உணவுக் கலாசாரத்திலிருந்து விலகிச் செல்கின்றது.

-(இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முட்டாள் அரசன்

முன்னொரு காலத்தில் ஆபிரிக்காவில் ஒரு முட்டாள் அரசன் இருந்தான். அவனுக்குத் திடீர் திடீர் என பல ஆசைகள் தோன்றி மறையும். அதை உடனே நிறைவேற்றும்படி தன் மக்களுக்குக் கட்டளையிட்டு அவர்களைப் பாடாய்ப் படுத்துவான்.

அரசனின் கட்டளையை நிறைவேற்றாது பராமுகமாக இருப்பவர்களை அவர்கள் குடும்பத்துடனேயே கொன்று விடுவான். இதனால், இக்கொடிய அரசனின் முன் நிற்பதற்கு மக்கள் அஞ்சி நடுங்கினர்.

ஒருநாள் தன் நாட்டில் உள்ள மிகச் சிறந்தவொரு இரும்புக் கொல்லனை மன்னன் அழைத்தான். "எல்லாமே போச்சு இன்று நமக்குக் கெட்ட நேரம். நடுக்காட்டில் கண்ணைக் கட்டி, விட்டது போல் இருக்கும் என் நிலை" என வருந்தி அஞ்சியபடியே அவன் அரசன் முன் சென்று நின்றான்.

"இப்போதே, எனக்கு இரும்பினால் ஒரு மனிதனை செய்து தர வேண்டும். அந்த மனிதனுக்கு மூளை, இரத்த ஓட்டம் எல்லாம் இருக்கவேண்டும். மொத்தத்தில் நம்மைப் போலவே இருக்கவேண்டும். அதற்கு என்னென்ன பொருட்கள் தேவையோ, எவ்வளவு பணம் தேவையோ என்னிடம் கேள். நான் தருகிறேன்" என்றான் மன்னன்.



கொல்லனோ இடியோசை கேட்ட நாகம் போல் ஆகிவிட்டான். நொந்து நூலாகிப்போன அவன் சோகத்துடன் வீடு வந்து சேர்ந்தான். கணவனின் சோகத்துக்குக் காரணமான விடயத்தைக் கேட்ட அவன் மனைவி ஏதோ ரகசியமாக அவன் காதில் கிசுகிசுத்தாள்.

மறுநாள் அன்று மலர்ந்த தாமரை போல் அரசவைக்குச் சென்ற கொல்லன் "அரசே! உயிருள்ள இரும்பு மனிதனைச் செய்ய நூறு குடம் கண்ணீரும், நூறு வண்டில் நிறைய தலைமுடியை எரித்த சாம்பலும் வேண்டும். அவற்றைக் கொடுத்தால் அடுத்தநாளே உயிருள்ள இரும்பு மனிதன் தங்கள் கண்முன் நிற்பான்" என்றான்.

உடனே மன்னன் கட்டளையிட, நாட்டு மக்கள் நாள்முழுவதும் அழுதும் ஒரு குடம் கண்ணீருக்கு மேல் பிடிக்க முடியவில்லை. மக்களின் தலையை மொட்டையடித்து எரித்த முடியின் சாம்பல் ஒரு வண்டிக்கு மேல் தேறவில்லை. மன்னனும் எவ்வளவோ அழுது பார்த்தான். கண்ணீர் எல்லாம் காய்ந்து போனதே அன்றி, பிடித்து வைக்க முடியவில்லை. ஒருவழியாக தன் இயலாமையை உணர்ந்த மன்னன் கொல்லனைக் கூப்பிட்டு, "உயிருள்ள இரும்பு மனிதனைச் செய்ய வேண்டாம்" எனக் கூறிவிட்டான். இதனால், கொல்லனும், அவன் மனைவியும் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். அன்றிலிருந்து அந்த முட்டாள் அரசன் முட்டாள்தனமாக எதைக்கேட்டாலும் மக்களும் முட்டாள் தனமாக அவன் வழியிலே போக நாளடைவில் தன்னுடைய முட்டாள்தனத்தையே விட்டுவிட்டான் அரசன்.

ஹஸ்னா லரீப்,
இ/பாலர் இயேசு கன்னியர் மடம்.




# இலவசக் கல்வியின் தந்தை



இலவசக் கல்வியின் தந்தையெனப் போற்றப்படுபவர் சி.டபிள்யூ.டபிள்யூ.கன்னங்கர ஆவார். வறுமையான குடும்பத்தில் பிறந்த இவர் கல்வி கற்பதில் மிகுந்த ஆர்வமும் திறமையும் கொண்டிருந்தார். காலி ரிச்மண்ட் கல்லூரியில் புலமைப் பரிசில் மூலம் உயர்கல்வி கற்கும் காலத்தில் அவர் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேர்ந்தது. பிரித்தானிய ஏகாதிப்த்தியத்தின்கீழ் தான் அனுபவித்த துன்பங்களை தனது சந்ததியினர் அனுபவிக்க விடக் கூடாது என்ற உயர்ந்த லட்சியத்துடன் செயற்பட்டார். தனது கல்வியை முடித்துக்கொண்ட, அவர் 1910 இல் காலி ரிச்மண்ட் கல்லூரியில் ஆசிரியராக நியமனம் பெற்றார். பின்னர் மொரட்டுவ வேல்ஸ் கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்தார்.

பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை இலவசக் கல்வியை பெற்றுக்கொடுப்பதற்கு அவர் அரும்பாடுபட்டார். மேலும் தேர்தல் தொகுதி தோறும் பாடசாலைகளை நிறுவித் திறமை வாய்ந்த மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்கி அக்கல்லூரிகளில் பயில வாய்ப்பளித்தார். ஆரம்பப்பிரிவில் பாடசாலைகளில் தாய்மொழியில் கல்வி போதிக்கப்பட வேண்டும் என்ற கொள்கையைக் கடைப்பிடித்தார்.

கல்வியைப் புத்தகங்களில் மாத்திரம் வரையறுத்து விடாமல் மாணவர்களின் ஆளுமை விருத்தியை மேம்படுத்துவதற்கும் திறமைகளை வளர்த்துக் கொள்வதற்கும் உரிய வசதிகளை பெற்றுக் கொடுத்தார். நாடெங்கிலும் கிராமங்கள்தோறும் கல்விமான்கள் உருவாவதற்கு அன்னாரின் உயரிய சேவைகளே, காரணமாக அமைந்தன. தற்போது இலவசக் கல்வியால் பயனடையும் நாம் அனைவரும் கன்னங்கரா அவர்களுக்கு என்றும் நன்றியுடையோராக இருப்போமாக.

ஏ.கலைக்காந்தன்,
இந்துக் கல்., கொழும்பு-15.

# உலகின் மிகச்சிறிய ரயில்



உலகில் இயங்கும் நிலையிலுள்ள மிகச்சிறிய ரயில் தொகுதியை அமெரிக்காவைச் சேர்ந்த டேவிட் ஸ்மித் என்பவர் வடிவமைத்துள்ளார்.

நீள் வட்டமான பாதையில் செல்லும் இந்த ரயிலின் நீளம் 1/4 அங்குலம். அகலம் 1/8 அங்குலம். 5 பெட்டிகள் கொண்ட இந்த ரயில் தொகுதியில் ரயில் நிலையங்கள், சுரங்கப்பாதைகள் என்பனவும் உள்ளன.

55 வயதான டேவிட் ஸ்மித் சிறிய கத்தியொன்றையும் தனது கைகளையும் மாத்திரம் பயன்படுத்தி இந்த ரயில் தொகுதியை வடிவமைத்துள்ளார். இதற்கு அவருக்கு 11 டொலர் மாத்திரமே செலவாகியதாம்.

சுழலும் குழாயைக்கொண்ட இயந்திரமொன்றுக்கு மேல் இந்த ரயில் தொகுதி பொருத்தப்பட்டுள்ளது. இதனால், இயந்திரம் இயங்கும்போது நீள்வட்டமான பாதையில் ரயில் சுற்றி வருவதைப்போல் தோன்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

எச்.எம்.அஸ்லம்,
ஓட்டமாவடி தே.பாட., ஓட்டமாவடி.

# ஔவைக் கிழவி



ஔவைக் கிழவி நம் கிழவி
அமிழ்தின் இனிய சொற் கிழவி
செம்மை நெறிகள் பற்பலவும்
தெரியக்காட்டும் பழங்கிழவி

நெல்லிக் கனியைத் தின்றுலகில்
நீடு வாழ்ந்த தமிழ்க்கிழவி
வெல்லற்கரிய மாந்தரெல்லாம்
வியந்து போற்றும் ஒரு கிழவி

கூழுக்காக கவிபாடும்
கூனற்கிழவி அவளுரையை
வாழும் வாழ்வில் ஒருநாளும்
மறவோம் மறவோம் மறவோமே!

[illegible],
யாழ். பரியோவான் கல்.
யாழ்ப்பாணம்.

# வெட்டுக்கிளி



பயிர்ச்செய்கைகளில் பெரும் அழிவுக் காரணியாக விளங்குவது வெட்டுக்கிளி (Grass hopper) ஆகும்.

கோடிக்கணக்கில் கரும் முகில்கள் விரைந்து வந்து இறங்குவது போன்று விளைநிலத்தில் இறங்கி, அவற்றை அழித்துவிடும் பூச்சிகள்தான் இவை. பெரும்பாலும் கரப்பான் பூச்சி இனத்தைச் சேர்ந்த இவை கடித்துண்ணும் தாடை கொண்டவை. பெரும் கூட்டம் கூட்டமாகவே வாழ்பவை. இந்த வெட்டுக்கிளிகளில் குட்டையான உணர் கொம்புகள் உள்ளவை ஒருவகை. நீண்ட உணர்கொம்புகள் உள்ளவை இன்னொரு வகை. வெட்டுக்கிளிகள் லட்சக்கணக்காகப் பெருகி பயிர்ச்செய்கைகளைப் பாழ் செய்து பஞ்சத்தை உண்டாக்குவது உலகில் பாரிய ஒரு பிரச்சினையாகவே காணப்படுகின்றது.

பூ.சுதர்ஷன், தரம் - 9A, ராகலை த.வித்.,

# சிந்தனைத் துளிகள்


- இடையூறுகளைக்கண்டு கலங்காதே. இடையூறுகளில் தான் வீரமும், தியாகமும், மனப்பக்குவமும், உயர்ந்த நோக்கங்களும் சீராக வளர்கின்றன.
- கற்கள் என்பதற்காக எவரும் அவற்றை ஒதுக்கி விடுவதில்லை. ஓர் திறமையுள்ள கலைஞன் கற்களைப் பயன்படுத்தி அழகான கட்டடங்களைக் கட்டியெழுப்புவான்.
- உன் வீட்டு விளக்கால் அடுத்த வீட்டுக்காரன் ஒளிபெறக்கூடாது என்பதற்காக கொளுத்திய விளக்கை கூரைக்குள் மறைக்காதே.
- துன்பம் இல்லாமல் இன்பத்தை அடைந்தவனுக்கு அவன் அடைந்த இன்பமே ஒருநாள் துன்பமாகலாம்.
- உணரும் உள்ளம்தான் உண்மையான உள்ளம். உண்மைகள் சோதிக்கப்படும்போது அதன் மதிப்புக் குறையாது.
- நேர்மையாக நடப்பதால் துன்பங்கள் குவிகின்றன என்பதற்காக பொய் வாழ்வைத் தேடாதே. நிலைத்து நில்லாத பெரிய மணல் மேடுகளைவிட, நிலைத்து நிற்கும் சிறிய கற்பாறைகளைத் தேர்ந்தெடு.
- உன்னை விட்டுப் பிரிந்து, விலகி விட்டதை எண்ணிக் கவலைப்படாதே, அடுத்து என்ன செய்யவேண்டும் என்பதைப் பற்றியே சிந்தி.

எஸ்.எஃப்.சிப்னா,
கு/பரகஹதெனிய தே.பாட.,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொழில்நுட்பத்தால் பாதிப்படையும் மூளையின் செயற்றிறன்



ஸ்லர் பயிற்சி நிறுவனத்தினருக்குரிய சஞ்சிகை ஒன்றில் ஆய்வுக்கட்டுரை ஒன்றை வெளியிட பேராசிரியர் இயன் ரொபட்சன் என்பவர் முனைந்தார். இக்கட்டுரையின் தகவல்கள் மிகச் சரியானதாகவும் ஆணித்தரமாகவும் இருக்க வேண்டுமென அவர் எண்ணினார். அதற்காக, அவர் விரிவானதொரு ஆய்வை (கணிப்பீடு) மேற்கொண்டார். அதன்மூலம் பல திடுக்கிடும் தகவல்கள் வெளிவந்தன.


தற்போது மனிதன் தொழில்நுட்பத்தின்மீது அளவிற்கு அதிகமாக நம்பிக்கை வைத்திருப்பதால் மூளையின் செயற்றிறன் மிக மோசமான அளவு குறைந்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

வெகுவாக கைத்தொலைபேசியை உபயோகிக்கும் சமுதாயத்தைச் சேர்ந்த (1/4) கால் பங்கினர் தம் வீட்டு மற்றும் காரியாலய தொலைபேசி இலக்கத்தை அறியாதவர்களாக இருக்கின்றனர். மூன்றில் ஒரு பங்கினர் (1/3) மட்டுமே தம் குடும்ப உறுப்பினர் மூவரின் பிறந்த தினங்களை அறிந்தவர்களாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## கணிப்பொறியின் ஆதிக்கம்

தற்போது உலகளாவிய ரீதியில் மனிதர்கள் தம் அன்றாடத் தேவைகளுக்காக தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகின்றனர். அவர்கள் தம் அநேக வேலைகளுக்கு இவற்றில் தங்கியிருப்பதால் தமக்கென்று தொழில்நுட்பங்கள் நிறைந்த மூளை ஒன்று இருப்பதை முற்றாக மறந்துவிடுகின்றனர். அன்றாட வாழ்வில் இத்தகைய பலரைப் பார்த்திருப்பீர்கள்!

உதாரணமாக; வர்த்தகத்தில் ஈடுபடுவோர்,மிகச்சிறிய பெருக்கல், கூட்டல், கழித்தல், வகுத்தல் கணக்குகளைக்கூட (கல்குலேட்டர்) கணிப்பொறியின்றிச் செய்யமுடியாது தவிப்பதைப் பார்த்திருப்பீர்கள்.





## நீங்கள் ஓர் ஆய்வு நடத்துங்கள்

**நீங்களே ஓர் ஆய்வை நடத்திப் பாருங்கள்.**

✸ உங்கள் நண்பர்களில் எத்தனை பேரின் தொலைபேசி இலக்கங்கள் இப்போது நினைவில் உள்ளது?

✸ கணிப்பொறியின்றி உங்களால் செய்யக் கூடிய கணக்குகளின் அளவு அதாவது, எல்லை என்ன?

✸ உங்கள் வங்கிக்கணக்கு எண், அடையாள அட்டை, கணினியில் பல தேவைகளுக்கான இரகசிய இலக்கங்கள் (Pass word) இவற்றில் இப்போது உங்கள் நினைவில் இருப்பவை எவை?

✸ உங்கள் குடும்ப உறவினர், நண்பர்களில் எத்தனை பேரின் பிறந்த நாட்கள் உங்கள் நினைவில் இருக்கின்றன?

✸ கல்வியோடு சம்பந்தப்பட்ட எத்தனை விடயங்களின் புள்ளி விபரத்தரவுகள் உங்கள் நினைவில் இருக்கின்றன.

இப்படிப்பட்ட பல கேள்விகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.



## செயற்றிறன் குன்றியவர்கள்

நவீன தொழில்நுட்பக் கருவிகளை குறைவாக உபயோகிக்கும் 50 வயதிற்கு மேற்பட்டவர்களுக்குத் தேவைப்படாத கருவிகள், 30 வயதிற்கு உட்பட்டவர்களுக்குத் தேவைப்படுகின்றன என்பதோடு, இக்கருவிகளை நீக்கிவிட்டுப் பார்த்தால் அவர்களின் தந்தைமாரைவிடவும் அவர்களின் பிள்ளைகள் அதாவது, இன்றைய இளைஞர்கள் செயற்றிறன் குன்றியவர்களாகவே மாறிவிடுகின்றனர்.இந்த ஆய்வில் பங்குபற்றியோரில் 58 சதவீதமானோர், 'ஞாபக மறதி' தமக்கு ஒரு பெரும் பிரச்சினை என தெரிவித்துள்ளனர்.

## பல சுவாரஸ்யம் நிறைந்த முடிவுகள்

இந்த ஆய்வின் மூலம் பல சுவாரஸ்யமான தகவல்கள் வெளிவந்தன.

✸ குடும்ப அங்கத்தவர்களின் பிறந்த தினத்தை 50 வயதிற்கு மேற்பட்டோரில் 87% மானோரும் இதே விடயத்தை 30 வயதிற்கு உட்பட்டவர்களில் 40 %மானோரும் நினைவில் வைத்திருந்தனர்.

✸ தமது திருமண தினத்தை பெண்களில் 90% மானோரும் ஆண்களில் 55% மானோரும் நினைவில் வைத்திருந்தனர்.

## வரையறையற்ற வசதிகள்

ஏற்கனவே இருந்த சுழற்றும் முறைக்குப் பதிலாக பொத்தானை அழுத்தும் முறை உருவானதால் விரைவாக தொலைபேசித் தொடர்பை ஏற்படுத்தக் கூடிய நிலை ஏற்பட்டது. இதனால், அனேகமானோர் இலக்கங்களை நினைவில் வைத்துக்கொள்ள முயற்சிக்கவில்லை. மூளையைப் பயன்படுத்தி ஞாபகத்தின் மூலம் செயற்படுத்தும் முறை மிகவும் குறைந்துவிட்டது. செல்லிடத் தொலைபேசிகளில் தற்பொழுது வரையறையற்ற வசதிகள் நிறைந்து காணப்படுவதால் மனித மூளையைப் பயன்படுத்துவது மிகவும் குறைந்துவிட்டது என்பது தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனால், உலகில் இயற்கையான அதிசிறந்த தொழில்நுட்பங்களைக்கொண்ட சாதனமாகிய மனித மூளையை,மனிதக் கண்டுபிடிப்புகளாகிய தொழில்நுட்ப சாதனங்கள் மழுங்கடிக்கின்றன என்ற கருத்தை நாம் ஏற்றுக் கொண்டே ஆகவேண்டும். இன்றைய இளைஞர்கள் புதுப்புது தொழில்நுட்ப சாதனங்களை நாடி, அவற்றைக் கையாண்டு அதன்மூலமே பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் கண்டு தம் வாழ்வை மேற்கொள்கின்றனரே தவிர, தம் மூளையைப் பயன்படுத்துவதில் இருந்து விலகிக் கொள்கின்றனர். இதனால், பயன்படுத்தாத கருவியொன்று பழசாகி, பழுதாகி, செயலிழந்து, துருப்பிடித்து வீணாவதைப் போன்று நம் மூளையும் செயலிழந்துவிடும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

**இரஞ்சித் ஜெயகர்**

## விஜய் மாணவர் கழகம்


அங்.இல: 3777

ஜே.மொஹமட், தரம் - $2^{A}$, அல்-நாசர் ம.வித்., கொழும்பு-14.


அங்.இல: 3778

இன்சாப் ஹிஸ்னி, தரம் - $5^{C}$, அல்-ஹிலால் வித்., கல்முனை.


அங்.இல: 3779

ர.துசியந்தன், தரம் - $7^{D}$, வ.த.ம.ம.வித்., வவுனியா.


அங்.இல: 3780

வி.ரமனீதரன், தரம் - $7^{B}$, வட்டகொட த.ம.வித்., வட்டகொட.


அங்.இல: 3781

எஸ்.வினோகாந்த், தரம் - 10, புனித பத்திரிசியார் கல்., யாழ்ப்பாணம்.


அங்.இல: 3782

கே.யதுர்ஷன், தரம் - 6, அ.த.ம.வித்., அக்கரப்பத்தனை.


அங்.இல: 3783

ய.ஹர்ஷிக்கா, தரம் - $6^{B}$, இ.மே.அ.த.க.பாட., கிளிநொச்சி.


அங்.இல: 3784

ம.சுஜிதா, தரம் - $9^{B}$, மல்லாவி மத்.கல்., மல்லாவி.


அங்.இல: 3785

எஃப்.நஸ்மா, தரம் - 5, அல்-ஹம்றா ம.வித்., தர்கா நகர்.


அங்.இல: 3786

முர்ஷித் அத்னான், தரம் - $6^{C}$, அல்-அஷ்ரக் தே.பாட., கல்முனை.


அங்.இல: 3787

ந.பத்மபிரியன், தரம் - $10^{B}$, யாழ்.இந்துக் கல்., யாழ்ப்பாணம்.


அங்.இல: 3788

இல்மியா, உயர் தரம், மெத்தேகெட்டிய மு.வித்., அலஹிடியாவ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஓவியம் வரைவோம் - 17

வழங்குபவர் - ஓவியக் கலைச்சுடர் எஸ்.எல்.எம்.மஹ்ரூஃப்

இந்த இதழினூடாக நாம் மூக்கின் அமைப்பு, தோற்றம் என்பன குறித்து நோக்குவோம்.

**பயிற்சி:**

- A என்று குறிக்கப்பட்டுள்ள படத்தில் மூக்கு வரையப்பட வேண்டிய இடம் காட்டப்பட்டுள்ளது. இங்குள்ள படங்களினூடாக நேர்பார்வை, பக்கப்பார்வைகளில் மூக்கு அமைந்துள்ள முறைகளைக் கவனியுங்கள்.
- படம் B யில் ரேகைகளால் மூக்கு வரையப்பட்டுள்ள பல்வேறு முறைகள் காட்டப்பட்டுள்ளன. இதனை அடிப்படையாகக்கொண்டு, நீங்கள் அவதானித்துள்ள பல்வேறு மூக்குகளின் அமைப்புகளை வரைந்து பாருங்கள்.
- C யில் பக்கப்பார்வையில் மூக்குகளின் தோற்றம் காட்டப்பட்டுள்ளது.
- D யிலும் பக்கப்பார்வையில் மூக்குகளின் தோற்றம் சித்தரிக்கப்பட்டுள்ளது.
- E எனக் குறிக்கப்பட்டுள்ள படங்களில் கீழ் இருந்து மூக்கை நோக்கினால் அமையும் முறைகள் காட்டப்பட்டுள்ளன.




## விஜய் 'விழா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு



பதுளை, மயிலகஸ்தன்னையைச் சேர்ந்த ரமேஷ்குமார்-ரதி தம்பதியரின் செல்வப் புதல்வி நவீஷ்னவர்ஷா, 13.09.2010 அன்று தனது எட்டாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை உறவினர்கள் அனைவரும் வாழ்த்துகின்றனர்.

*(தகவல்: திலக்ஷனா)*



வவுனியா, ஆச்சிபுரத்தைச் சேர்ந்த சந்திரமோகன்-வள்ளியம்மா தம்பதியரின் செல்வப் புதல்வன் மிதுர்ஷன், 19.09.2010 அன்று தனது பன்னிரெண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஸ்ரீ மீனாட்சி அம்மன் அருளால் பல்கலையும் பெற்று, பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர்.

*(தகவல்: ச.தனுசா)*



திஹாரியைச் சேர்ந்த யாஸீன்-ரியாஸா தம்பதியரின் செல்வப் புதல்வி பாத்திமா சஸ்னா, 19.09.2010 அன்று தனது பன்னிரெண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.



யாழ்ப்பாணம், கோப்பாயைச் சேர்ந்த சிவகடாச்சம்-நவநீதமணி தம்பதியரின் செல்வப் புதல்வன் நரேன், 27.09.2010 அன்று தனது பதின்மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடவுள்ளார். இவரைக் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனைவரும் இறையாசி பெற்று, நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.

## கைவண்ணங்கள்



அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



எஃப்.சமிரா, தரம் - $3^{B}$,
தாருல் உலூம் மு.ம.வித்., ரம்புக்கன.



ப.நிதுஷா, தரம் - $6^{A}$,
நெல்லியடி ம.ம.வித்., கரவெட்டி.



ப.விஜேந்தர், தரம் - $7^{A}$,
நெளுக்குளம் கலைமகள் ம.வித்.,
வவுனியா.



என்.அமீரா,
தரம் - $9^{A}$, பாத்திமா பா.மு.வித்.,
முருதகஹமுல.



ப.வினுஸ்தர், தரம் - $1^{B}$,
எட்வன்டீஸ்ட் ச.பாட., வவுனியா.




எஃப்.ரிஸ்லா, தரம் - 7,
இகலகினியம மு.ம.வித்., கினியம.



நபீஸ் நவ்ஷாட், தரம் - 2,
ஒக்ஸ்ஃபோர்ட் ச.கல்.,
நாவலப்பிட்டி.




கௌ.ஹரிதர்ஷன், தரம் - $8^{B}$,
ரணபிம றோயல் கல்., பேராதனை.



எஃப்.திஸ்னா, தரம் - $8^{A}$,
அறபா வித்., ஏறாவூர்.



[illegible]



எஃப்.அம்னா, தரம் - 4,
நாங்கல்ல மு.ம.வித்., நாங்கல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று கேள்விகள்



வந்தனபுரி என்ற நாட்டை அறிவுடை நம்பி என்ற மன்னர் ஆண்டு வந்தார். அவர் ஒரு கஞ்சப் பிரபு. எவருக்கும் பணத்தை எளிதில் கொடுக்க மனம் இல்லாதவர். அவருடைய அன்றாட வேலைகளைப் பார்ப் பதற்கு அவர் நியமித்த எந்த ஆட்களுக்கும் அவர் உரிய ஊதி யம் கொடுக்காததால், இவரிடம் யாரும் வேலைக்கு நிலைத்து நிற்பதில்லை.

இதனால், இவர் தமது வேலை களுக்குப் பணியாட்களை நிய மிக்கும்போது, மூன்று கேள்வி களைக் கேட்பார். அவற்றுக்குப் பொருத்தமான விடைகளை அளித்தவரையே வேலைக்கு அமர்த் திக் கொள் வார்.மேலும், அவர் வேலைக்கு நியமித்தவர் தாமாகவே வேலையை விட்டு விலகினால் ஊதியம் எதுவும் கொடுக்கமாட்டார். ஆனால், அந்த மன்னர் தாமாகவே ஒருவரை வேலையை விட்டு நீக்கினால், வேலை யாளுக்குச் சம்பளத்துடன், ஒரு பெரிய தொகையைக் கொடுப்பதாகச் சொல் வார். அத்துடன், அவரிடம் வேலை பார்ப்பவரைப் பிழிந்து எடுத்து விடுவார்.

இத்தகைய வேலைக்கொடுமை தாங்காமல், வந்த தடம் தெரியாமல் அந்த வேலையை விட்டு விட்டுச் சென்றவர்கள்தான் அதிகம். இதனால், அவராகவே யாரையும் வேலையை விட்டு நிறுத்தி யது இல்லை.

இந்த நிலையில், இவரு டைய அந்தரங்க மந்திரியாக இருந்தவர், அந்தக் கஞ்ச மன்ன ருக்கு ஒரு பாடம் புகட்ட எண்ணி னார். ஒரு காது கேளாதவனை மன்னரிடம் எப்படியாவது வேலைக்கு அமர்த்தி, அவனை இவர் வெளியேற்ற பெரும் தொகையும் சம்பளமும் பெற்றுக் கொடுக்கத் திட்டம் போட்டார். அதனால் சுத்த செவிடனான உதயா என்பவனை மன்னர் முன்பு கொண்டு வந்து நிறுத்தி னார். உடனே மன்னர் உதயாவிடம் தமது மூன்று கேள்விகளைக் கேட்கத் தொடங்கினார்.

"ஒரு தடவை போனாலும், எளிதில் நாம் அதைப் பெறலாம். அது எது?" எனக் கேட்க, "அது பணம்" எனப் பதில் கூறினான் உதயா.

"ஒருமுறை போனால் கிடைக்காதது எது?" என்றான் மன்னன்.

"இரவும் பகலும்" என்றான் உதயா.

மூன்றாவது கேள்வி, "உதவி செய்த ஒருவனுக்கு உதவிபெற்றவன் எத்தனை காலம் கடன்பட்டிருக்க வேண்டும்?"

"உயிர் உள்ளவரை" என்றான் உதயா! இவ்வாறு மூன்று கேள்விகளுக்கும் சரி யான விடை கூறியதால், செவிடனான உதயாவை உடனடியாக மிகுந்த திருப்தியுடன் வேலைக்கு வைத்துக்கொண்டார் மன்னர். எனினும், மறுநாளே உதயா வுக்கு காது கேட்காது என்ற விஷயம் மன்னனுக்குத் தெரியவந்தது.

உடனே உதயாவை மன்னன் ஓர் ஆசனத்தில் ஆற அமர இருத்தி மிகவும் ஆர்வத்துடன் ஒரு சில கேள்விகளைப் பொறுமையாகக் கேட்டு விளக்கம் பெற வேண்டும் எனத் தீர்மானித்தார். ஜாடை காட்டி உரத்த சப்தத்தில் கீழ்க்கண்ட வினாக்களை மன்னன் உதயாவிடம் கேட்டார்.

"எவ்வளவு சப்தம் போட்டுக் கேட்டா லும் நீ பேசாமல் இருக்கிறாய். எனக்கு ஏற்பட்ட சந்தேகத்தை நிச்சயம் நீ நிவர்த் திக்க வேண்டும் என்ற முடிவில்தான், நான் உன்னை உட்கார வைத்துச் சில கேள்விகளைக் கேட்கிறேன். நீ பதில் சொல்லியே ஆகவேண்டும்" என்றார்.

அத்துடன், "மன்னர்! கேள்வியைக் கேட்கவும் தொடங்கினார்".

"நீ நேற்று என் கேள்வி களுக்கு எப்படிச் சரியான பதிலைச் சொன்னாய்?" என்று வினவினார்.

"நீங்கள் கேட்ட கேள்விகள் என் காதில் நன்றாக விழுந்ததே. உங்கள் முதல் கேள்வி, "உனக்கு என்ன வேண் டும்?" என்றீர்கள். "பணம்" என்றேன். இரண்டாவது கேள்வி, "எப்போது வேலை செய்வாய்?" என்பது. இதற்கு "இரவும் பகலும்" என்றேன்.

மூன்றாவது கேள்வி, "எவ்வளவு காலம் வேலை செய்வாய்?" எனக் கேட்டீர்கள். "உயிர் உள்ளவரை" என விடை அளித்தேன்" என்றான்.

இவனை வைத்து வேலை வாங்கு வது மிகவும் சிரமம் என்று கருதி ஒப்பந்தப்படி பெரும் தொகை பணத் தைக் கொடுத்துக் கெஞ்சிக்கூத்தாடி அவனை வழியனுப்பி வைத்தார் மன்னர். அன்றிலிருந்து அந்தக் கஞ்ச மன்னர் எவரையும் ஏமாற்றுவதே இல்லை.




# காகத்தின் தட்டிப்பறிக்கும் குணம்

ஒருநாள் கருந்தலைக் காகம் வேலி மேல் உட்கார்ந் திருந்தபோது கனமான கல் ஒன்று அதன் தலைக்கு மேலாகத் திடீரென்று சீழ்க்கை அடித்துப் பறந்தது. தெரு வோடு போன பள்ளி மாண வர்கள் சிலர் வேலி மேல் உட்கார்ந்திருந்த காகத்தைப் பார்த்துவிட்டார்கள். உடனே அதன் மேல் கற்களை வீசி எறிந்தார்கள்.

"என்ன இப்போது பார்த்தாயா?" என்று கூரைக்குப் பறந்து போன பின் கேட்டது காகம்.

"இவர்கள், அதாவது மனிதர்கள் எல்லோருமே இப்படித்தான்"

"ஒருவேளை நீங்கள் எப்போதாவது இவர்களுக்கு ஆத்திரம் ஊட்டி இருக்கிறீர் களா அத்தை?"

"கிடையவே கிடையாது.... சும்மா இருக்கும் எனக்கு இப்படித் தீங்கு செய்கிறார் கள். இவர்கள் எல்லோரும் என்னைக் கரிக்கிறார்கள்".

எனினும், பொதுவாகவே பகைவர்கள் பறவைகளுக்கு நிறையவே இருந்தார்கள். உதாரணமாக, பூனை வாஸ்கா ஒரே பேராசை ததும்பும் விழிகளால் எல்லாப் பறவைகளையும் பார்த்தது. தூங்குவது போல நடித்தது. அனுபவம் இல்லாத சின்னக் குருவிக் குஞ்சை அது பிடித்ததைக் கனேரிப் பறவை தன் கண்களால் கண்டது. அதன் எலும்புகள் நொருங் கின. இறகுகள் பறந்தன... ஐயோ, என்ன பயங்கரம்!

ஆனால், காகம் பூனை களுக்கோ, பருந்து களுக்கோ அஞ்ச வில்லை. தானும் சின்னப் பறவைகளை ருசித்துத் தின்னத் தயங்க வில்லை. கனேரிப் பறவை முதலில் இதை நம்பாதிருந்தது. ஆனால், அப்புறம் கண்கூடாகப் பார்த்துத் தெரிந்துகொண் டது. ஒருநாள் குருவிகள் ஒரே கூட்டமாகச் சேர்ந்து காகத்தைத் துரத்தி வந்ததை அது கண்டது. அவை பறந்துகொண்டே கீச்சிட்டுக் கத்தின... கனேரிப் பறவை பயந்து நடுங்கிப் போய்க்கூட்டில் பதுங்கிக் கொண்டது.

சிட்டுக்குருவிகள் காக்கைக் கூட்டுக்கு மேல் பறந்தபடியே, "கொடுத்துவிடு! கொடுத்து விடு!" என்று வெறிக்கூச்சல் போட்டன. "இது என்ன அக்கிரமம்? இது வழிப்பறி!" என்றன. காகம் தன் கூட்டுக்குள் விர்ரென்று புகுந்தது. இரத்தக் கறைபட்ட இறந்த குருவிக் குஞ்சு ஒன்றை அது தன் அலகால் பற்றி எடுத்து வந்ததைக் கனேரிப் பறவை கண்டது.

"அத்தை நீங்கள் என்ன செய்கிறீர்கள்?"

"பேசாதிரு..." என்று சீறிற்று காகம். அதன் கண்கள் பயங்கரமாகப் பளபளத்தன... அக்குருவிக்குஞ்சைக் காகம் கொத்திக் கிழிப்பதைப் பார்க்கா மல் இருப்பதற்காக அச்சத்தால் தன் கண்களை மூடிக்கொண்டது கனேரிப் பறவை.

"என்னையும் இது எப்போதாவது இந்த மாதிரித் தின்று விடும்" என்று எண்ணிற்று.

தானாகவே இரை தேடச் சோம்ப லாக இருந்தபோது காகம் கபடத்தனத் தைக் கையாண்டது. அருகில் குருவிகள் இரை எதையாவது கொத்து வதைக் கண்டால் உடனே தொண்டை கிழியக் கத்தியபடி, அக்குருவியின் அருகில் சென்று அவற்றின் இரையை லபக்கென்று கொத்திக்கொண்டு பறந்து போயிற்று.

"மற்றவர்களிடம் தட்டிப் பறிப்பது நல்லதில்லையே அத்தை" என்று ஒரு தரம் கோபத்தோடு சொல்லிற்று கனேரிப் பறவை.

"நல்லதில்லையா? ஆனால், எனக்கு எப்போது பார்த்தாலும் பசிக்கிறதே. என்ன செய்ய?"

"மற்றப் பிராணிகளுக்குந்தான் பசிக்கிறது..."

"மற்றவை தங்கள் பாட்டைத் தாங்களே பார்த்துக்கொள்ளும். உங் களைப் போன்ற சொகுசுப் பறவை களுக்குத்தான் மனிதர்கள் கூண்டில் இரை போடுகிறார்கள். நாங்கள் இரை தேடிக்கொள்ள வேண்டும். தவிரவும், உனக்கோ, குருவிக்கோ தீனி நிறை யத் தேவையில்லை. ஒரு தானிய மணியைக் கொத்தினால் நாள் பூராவும் பசி எடுக்காது"

கோடை காலம் கவனத்தில் படாமல் கழிந்துவிட்டது. வெயிலின் சூடு குறைந்து கொண்டு போயிற்று. பகல் குறுகிற்று. மழை பெய்யத் தொடங்கிற்று. குளிர் காற்று அடித்தது. தான் எல்லாவற்றிலும் அதிகமாகத் துன்பப்படும் பறவை என்று கனேரிப் பறவை எண்ணிற்று. அதிலும் கடும் மழை பெய்தபோது, காகமோ, எதையும் கவனித்ததாகத் தெரியவில்லை.

"மழை பெய்கிறது என்றால் என்ன வந்துவிட்டது?" என்று அது ஆச்சரியப்பட்டது. " பெய்கிற வரை பெய்துவிட்டு நின்றுவிடும்" என்றது.

"ஆனால், குளிர்கிறதே அத்தை! ஐயோ எப்படிக் குளிர்கிறது" இரவு நேரங்களில் குளிர் படுமோசமாக இருந்தது. அதில் கனேரிப் பறவை வெடவெடவென்று நடுங்கிற்று. போதாக்குறைக்குக் காகம் வேறு சள்ளென எரிந்து விழுந்தது.

(தொடரும்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களம் பயில்வோம் 261



## ආයුබෝවන்
## ஆயுபோவன்
## வணக்கம்

இன்றைய பாடத்தில் அனிலுக்கும் கமலுக்கும் இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

කමල්: අනිල් එන්න අපි බයිසිකල් පදිමු.
அனில் என்ன அபி பயிசிகல் பதிமு.
கமல்: வாருங்கள் அனில் நாங்கள் சைக்கிள் மிதிப்போம்.

අනිල්: බයිසිකලයක් කෝ?
பயிசிகலயக் கோ?
அனில்; சைக்கிள் எங்கே?



කමල්: එන්නකෝ අපේ ගෙදර යන්න.
என்னகோ அபே கெதர யன்ன.
கமல்: வாருங்களேன் எங்கள் வீட்டுக்குப் போகலாம்.

අනිල්: ඔයාලගේ ගෙදර බයිසිකලයක් නැහැනේ.
ஒயாலகே கெதர பயிசிகலயக் நெஹேனே.
அனில்: உங்கள் வீட்டில் சைக்கிளொன்று இல்லையே.

කමල්: ඔයා එන්නකෝ...
ஒயா என்னகோ...
கமல்: நீங்கள் வாருங்களேன்...

කමල්: අනිල් මෙහෙන් එන්න. මේ බලන්න.
அனில் மெஹென் என்ன. மே பலன்ன.
கமல்: அனில் இந்தப் பக்கமாக வாருங்கள். இங்கே பாருங்கள்.

අනිල්: ආ... අලුත් බයිසිකලයක්. කොහෙන්ද කමල්? හරි ලස්සනයි.
ஆ... அலுத் பயிசிகலயக். கொஹெந்த கமல்? ஹரி லஸ்ஸனய்.
அனில்: ஆ.... புதுச் சைக்கிள் ஒன்று. எங்கிருந்து கமல்? அழகாக இருக்கிறது.

කමල්: අපේ මාමා පිටරට ඉඳලා ආවා. එයා අරන්දුන්නේ.
அபே மாமா பிடரட இந்தலா ஆவா. எயா அரன்துன்னே.
கமல்: எங்கள் மாமா வெளிநாட்டில் இருந்து வந்தார். அவர் வாங்கிக் கொடுத்தார்.

කමල්: එන්න අපි පදිමු. අම්මේ අපි බයිසිකල් පදිනවා.
என்ன அபி பதிமு. அம்மே அபி பயிசிகல் பதினவா.
கமல்: வாருங்கள் நாங்கள் மிதிப்போம். அம்மா நாங்கள் சைக்கிள் மிதிக்கப் போகின்றோம்.



අම්මා: පුතා පරිස්සමෙන්.
புதா பரிஸ்ஸமென்.
அம்மா: மகன் கவனமாக.

කමල්: හොඳයි අම්මේ.
ஹொந்தய் அம்மே.
கமல்: நல்லது அம்மா.

### பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

*உதாரணம்:* அனில் நாங்கள் சைக்கிள் மிதிப்போம்.
අනිල් අපි බයිසිකල් පදිමු.

i. புதுச் சைக்கிள் ஒன்று. எங்கிருந்து கமல்?
..........................................................
ii. எங்கள் மாமா வாங்கிக் கொடுத்தார்.
..........................................................
iii. மிகவும் அழகாக இருக்கிறது கமல்.
..........................................................






நடைபெற்று முடிந்துள்ள சில கருமங்களை, தகவல்களாக (Informations) தெரிவிப்பதற்கும் நிகழ்கால வினைமுற்று வாக்கியங்களை (Present Perfect Tence) பயன்படுத்துவதுண்டு. அத்தகைய வாக்கியங்களை மேலும் இங்கே அவதானிப்போம்.

(அ) I have seen her somewhere.
நான் அவளை எங்கேயோ பார்த்துள்ளேன்.
* Have seen - பார்த்துள்ளேன்.
(Compound Verb - கூட்டு வினைச்சொல்)

(ஆ) He has left that house.
அவன் அந்த வீட்டைவிட்டு வெளியேறிவிட்டான்.
* Has left - வெளியேறிவிட்டான்.
(Compound Verb -கூட்டு வினைச்சொல்)

(இ) They have left that place.
அவர்கள் அந்த இடத்தைவிட்டு வெளியேறிவிட்டார்கள்.
* Have left - வெளியேறிவிட்டார்கள்.
(Compound Verb - கூட்டு வினைச்சொல்)

(ஈ) I have left that place.
நான் அந்த இடத்தைவிட்டு வெளியேறிவிட்டேன்.
* Have left - வெளியேறி விட்டேன்.
(Compound Verb - கூட்டு வினைச்சொல்)

(உ) He has sent that parcel.
அவன் அந்தப் பொதியை அனுப்பிவிட்டான்.
* Has sent - அனுப்பிவிட்டான்.
(Compound Verb - கூட்டு வினைச்சொல்)

(ஊ) She has studied several subjects.
அவள் பல பாடங்களைக் கற்றுள்ளாள்.
* Has studied - கற்றுள்ளாள்.
(Compound Verb - கூட்டு வினைச்சொல்)

(எ) It has run into the garden.
அது தோட்டத்துக்குள் ஓடிவிட்டது.
* Has run - ஓடி விட்டது.
(Compound Verb - கூட்டு வினைச்சொல்)

(ஏ) It has fallen from the tree.
அது மரத்தில் இருந்து விழுந்துவிட்டது.
* Has fallen - விழுந்துவிட்டது.
(Compound Verb - கூட்டு வினைச்சொல்)

(ஐ) I have written a letter.
நான் கடிதம் ஒன்றை எழுதியுள்ளேன்.
* Have written - எழுதியுள்ளேன்.
(Compound Verb - கூட்டு வினைச்சொல்)

(ஒ) You have made a mistake.
நீ தவறு ஒன்றைச் செய்துவிட்டாய்.
* Have made - செய்து விட்டாய்.
(Compound Verb - கூட்டு வினைச்சொல்)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணிகள் விமானம் விபத்தில்...





வெனிசுலா நாட்டின் பயணிகள் விமானமொன்று விபத்திற்குள்ளாகியதில் 15 பேர் மரணமடைந்ததுடன், 36 பேர் உயிர் தப்பியதாக செய்திகள் தெரிவிக்கின்றன. எனினும் உயிர் தப்பியவர்களில் பலர் இன்னமும் ஆபத்தான கட்டத்திலேயே இருப்பதாகவும் அநேகர் தீக்காயங்களிற்கு உள்ளாகியிருப்பதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

மேற்படி விமானத்தில் 47 பயணிகளும் விமான ஓட்டியுடன் பணியாளர்கள் 4 பேரும் இருந்துள்ளனர். விபத்திற்கான காரணம் தொழில்நுட்பக் கோளாறே என்று ஆரம்ப விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.






## அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

| | |
|---|---|
| அற்லஸ் கேள்வி - 274 | |
| **கேள்வி:** 'நாஸா'வைச் சேர்ந்த எத்தனை பேர் 'சிலி'க்கு சென்றுள்ளனர்? | **போட்டி இல - 272 இன் சரியான விடை: சென் வயட்** |
| சரியான விடை................................ | **பரிசு பெறுவோர்** |
| உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள். | ஜே.ஜே.சார்ள்ஸ், 02, மகா ஊவா, வலப்பனை. |
| அனுப்ப வேண்டிய முகவரி: | பாலேந்திரன் சுகிர்தன், 46, இராஜ வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். |
| அற்லஸ் வழியே உலகைக் காண்போம், கேள்வி - 274, விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு. | தனு பவானந்தமுருகன், 1 ஆம் வட்டாரம், சல்லி, சாம்பல் தீவு, திருகோணமலை. |

### அவுஸ்திரேலிய

# வெளிவிவகார அமைச்சராக முன்னாள் பிரதமர்



அவுஸ்திரேலியாவில் ஆட்சி அமைத்துள்ள ஜூலியா கிலாட்டின் தலைமையிலான அரசாங்கத்தின் அமைச்சரவை அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, புதிய அமைச்சரவையில் வெளிவிவகார அமைச்சராக முன்னாள் பிரதமரான கெவின் ரூட் நியமிக்கப்பட்டுள்ளார்.

மூன்று மாதங்களுக்கு முன்னர்தான் பிரதமர் பதவிக்கும் தொழிற்கட்சியின் தலைமைப் பதவிக்கும் கிலாட் நியமிக்கப்பட்டிருந்தார். கட்சிக்குள் இடம்பெற்ற பதவிக் கவிழ்ப்பு நடவடிக்கைகளையடுத்தே, அவர் இப்பதவிகளை சுவீகரித்திருந்தார். இதன்போது பதவி இழந்தவர்தான் கெவின் ரூட்.



ஓகஸ்ட் 21 ஆம் திகதி ஆஸியில் இடம்பெற்ற தேர்தலில் எந்தவொரு கட்சிக்கும் பெரும்பான்மை ஆசனங்கள் கிடைக்காத நிலையில் ஜூலியா கிலாட்டின் தொழிற்கட்சிக்கு சுயேட்சை உறுப்பினர்கள் இரண்டு பேர் ஆதரவு தர சம்மதித்ததையடுத்தே, கிலாட் அரசாங்கத்தை அமைத்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# "பொய் வாக்குறுதிகள் வேண்டாம்"

## -'நாஸா' அதிகாரிகள் வேண்டுகோள்

சிலியில் சுரங்கத்துக்குள் சிக்கியிருக்கின்ற 33 ஊழியர்களையும் மீட்கும் விடயத்தில் பொய்யான வாக்குறுதிகளை வழங்கவேண்டாம் என்று அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி நிலையமான நாஸாவின் அதிகாரிகள் சிலி அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.




மேற்படி சுரங்கத்தில் சிக்கியிருப்பவர்களை மீட்பதற்காக 'நாஸா' நிறுவனத்திலிருந்து 4 நிபுணர்களைக்கொண்ட குழுவொன்று அங்கு விஜயம் செய்துள்ளது.

இந்த நிபுணர் குழுவின் கருத்தின்படி, "பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்குப் பொய்யான வாக்குறுதிகளைக் கொடுப்பதில் பயனில்லை. எப்போது அவர்களை வெளியே கொண்டு வரலாம் என்பது குறித்த கால எல்லையைக் கூறமுடியாது. அவ்வாறு கூறுவதும் தவறு" என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# கடல் வழியே உலகை வலம்வந்து சாதனை படைக்கவுள்ள சிறுமி..!



ஜெசிக்கா வொட்சனை உங்களுக்கு ஞாபகம் உள்ளதா? தன்னந்தனியே சிறிய படகொன்றின் மூலமாக கடல்வழியே உலகை வலம் வந்து உலக சாதனையை நிகழ்த்திய 16 வயது சிறுமிதான் அவர்.

தற்போது இவரது இந்த சாதனையை முறியடிப்பதற்கு நெதர்லாந்தைச் சேர்ந்த 14 வயது சிறுமியொருவர் களம் குதித்துள்ளார். இந்த சிறுமியின் பெயர் லோரா டெக்கர். இவரும் கடந்த ஓகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி முதல் கடல் வழியே உலகை வலம் வரும் சாதனையை ஆரம்பித்துள்ளார். அதன்படி, தன்னந்தனியே படகின் மூலம் உலகை வலம் வருகின்ற வயதில் குறைந்தவர் என்ற சாதனையை தனதாக்கிக் கொள்ளும் முயற்சியில் லோரா இறங்கியுள்ளார்.



லோராவைப் பொறுத்தவரையில் அவர் இந்த சாதனைக்குரிய பயணத்தை போர்த்துக்கல் லிஸ்பியன் நகரிலிருந்து ஆரம்பித்துள்ளதுடன், தனது பயணத்தை போர்த்துக்கல்லிலேயே முடிக்க வேண்டியிருக்கும். இது ஒருவகையில் முன்னைய சாதனையாளர் ஜெசிக்காவைவிட லோராவிற்கு கடினமான விடயமாக இருக்கும் என்றே கருதப்படுகின்றது.

ஏனென்றால் ஜெசிக்கா அவுஸ்திரேலிய நாட்டவராக இருந்தமையால் அது அவருக்கு வசதியாக அமைந்தது. காரணம் தனது பயணத்தை அவர் அவுஸ்திரேலியாவிலேயே முடிக்கக்கூடியதாக இருந்தது. ஆனால், லோராவிற்கோ போர்த்துக்கல்லில் ஆரம்பித்து போர்த்துக்கல்லிலேயே முடிக்கவேண்டியிருப்பதால் அப்பகுதியில் கடல் மிகவும் கொந்தளிப்பும் கூடிய காற்றழுத்தமும் கொண்டதாக இருப்பதாலேயே அவருக்கு இந்தப் பயணம் கடினமாக இருக்கும் என்று கருதப்படுகின்றது.

இரண்டு வருட கடல் பயணத்தின் பின்னர் 2013 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 16 ஆம் திகதி போர்த்துக்கல்லை இவர் வந்தடைவார். இன்னுமொரு சிறப்பு என்னவென்றால், லோராவின் தாயார் அவரைப் பெற்றெடுத்தது கடல்நடுவில்தானாம். நியூஸிலாந்தை நோக்கிய கடல் பயண சுற்றுலாவொன்றை மேற்கொண்டிருந்தபோதுதானாம். லோரா 1996 ஆம் ஆண்டு பிறந்துள்ளார்.

ஜெசிக்காவிற்குப் போலவே லோராவிற்கும் இந்த கடல் பயணம் தொடர்பாக சட்டப்பிரச்சினைகள் எழுந்தன. லோரா போன்றவொருவர் இவ்வாறு ஆபத்தான கடல் பயணத்தை மேற்கொள்வது நல்லதல்ல என்றும் அவர் இன்னும் சிறுபராயத்திலேயே இருப்பதாகவும் நெதர்லாந்தைச் சேர்ந்த சிறுவர் பாதுகாப்புத் திணைக்களத்தின் சார்பாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆயினும், மேற்படி திணைக்கள அதிகாரிகளுடன் ஒருவருட காலமாக கடுமையான வாதப் பிரதிவாதங்களின் பின்னரே லோரா இந்த கடல் பயணத்தை ஆரம்பித்துள்ளார். அதற்கமைய, ஓகஸ்ட் மாதம், 14 ஆம் திகதி தனது படகில் பயணத்தை ஆரம்பித்தார் லோரா. அவரது தந்தைதான் இதற்கான பயிற்சிகளை வழங்கியிருந்தார். லோரா பயணம் செய்கின்ற படகின் பெயர் 'குபி' ஆகும். இதன் நீளம் 11.5 மீற்றர். இவரது பெற்றோரால்தான் இந்தப் படகு அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. சிறுமியின் இந்த துணிச்சலான பயணமும் சாதனையும் நிறைவேற வாழ்த்துவோமாக.



### திருத்தம்

கடந்த வாரம் (15.09.2010) இதழில் 'உலக அறிவை வளர்த்துக்கொள்வோம்' என்ற தலைப்பில் நெப்போலியன் பொனபொட் பிறந்தது 'குரோசிக்கா' என்பதற்குப் பதிலாக குரோஷியா எனவும் உலக மகா யுத்தம் முடிவடைந்தது '1918' என்பதற்குப் பதிலாக 1914 என்றும் தவறாக பிரசுரமாகிவிட்டது. தவறுக்கு வருந்துகின்றோம். *(ஆ-ர்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொமன்வெல்த் போட்டிகள் நடைபெறுவதில் சந்தேகம்...!



ஒக்டோபர் மாதம் 3 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை இந்தியாவில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் (கொமன்வெல்த்) விளையாட்டுப் போட்டிகள் குறித்தபடி நடைபெறுமா? என்பதில் பல சந்தேகங்கள் ஏற்பட்டுள்ளன.

இப்போட்டிகள் தொடர்பாக பலவித ஊழல் புகார்கள் ஏற்பட்டுள்ளதுடன், போட்டிகள் நடைபெறவுள்ள நாட்களில்



DELHI 2010
XIX COMMONWEALTH GAMES

டெல்லியில் கடுமையான மழை பெய்யக்கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளமையாலுமே மேற்படி விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுமா? என்பதில் சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொமன்வெல்த் போட்டிகள் இந்தியாவில் நடத்துவது தொடர்பாக, கோடிக்கணக்கிலான நிதி மோசடிகள் நடைபெற்றிருப்பதாக குற்றஞ்சாட்டப்பட்டதையடுத்து, போட்டி ஏற்பாட்டாளர்களில் சிலர் பதவியிலிருந்து நீக்கப்பட்டனர். இதுவும் இந்தியாவில் பாரிய பிரச்சினைகளை ஏற்படுத்தியது. இத்தகைய நிலையிலேயே, மழை பெய்யக் கூடும் என்று வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளதையடுத்து, மேற்படி போட்டிகள் நடைபெறுவது குறித்து சந்தேகங்கள் ஏற்பட்டுள்ளன.

# உலகக்கிண்ண றகர் போட்டிகள் அடுத்த வருடம் நியூஸிலாந்தில்

றகர் போட்டிகள் உலக அளவில் பிரபல்யம் பெற்று வருகின்றமை நாம் அறிந்ததே. கடந்த 30 வருடகாலத்தில் மிக வரைவாக பிரபல்யத்தை அடைந்து வருகின்ற றக்பி போட்டிகளுக்கு இலங்கையிலும் அதிகமான ரசிகர்கள் உள்ளனர். இத்தகைய சிறப்புமிக்க றக்பி போட்டியையொட்டி



உலகக்கிண்ணப் போட்டிகளும் நான்கு வருடங்களுக்கு ஒரு தடவை நடைபெறுகின்றது.

இதன்படி, 2007 ஆம் ஆண்டில் நடைபெற்ற உலகக்கிண்ண றகர் போட்டிகளில் இங்கிலாந்து அணியே செம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றியது. இதன் அடுத்தபடியாக, 2011 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள றக்பி உலகக் கிண்ணப் போட்டிகள் நியூஸிலாந்தில் நடைபெறவுள்ளன.

உலக நாடுகளிலுள்ள றக்பி அணிகளில் குறிப்பிடத்தக்க பலம்மிக்க ஓர் அணியாக நியூஸிலாந்து கருதப்படும் நிலையில் அடுத்த உலகக்கிண்ணப் போட்டிகள் நியூஸிலாந்தில் நடைபெறவுள்ளமையும் அந்த அணிக்கு மற்றுமொரு அனுகூலமாக அமையும் என்றே கருதப்படுகின்றது.

எனவே, அடுத்த உலகக் கிண்ண றக்பி போட்டிகளுக்கான பிரச்சார நடவடிக்கைகள் தற்போதே ஆரம்பமாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

நியூஸிலாந்தில் நடைபெறவுள்ள இந்த உலகக் கிண்ணத்தையொட்டி அதன் அயல் நாடான அவுஸ்திரேலியாவும் றகர் பந்து வடிவிலான இராட்சத பலூன் ஒன்றினை சிட்னி நகரில் நிர்மாணித்து பிரபல்யப்படுத்தலை மேற்கொண்டுள்ளது.



## ஆசிய கூடைப்பந்தாட்டம் செப். 30 இல் ஆரம்பம்

மகளிருக்கான ஆசியக் கிண்ண கூடைப்பந்தாட்டப் போட்டி இம்மாதம் 30 ஆம் திகதி இந்தியாவின் புனேயில் ஆரம்பமாகின்றது. பதினாறு வயதிற்கு கீழானவர்களே இப்போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளனர்.

பத்து நாடுகள் கலந்து கொள்கின்ற மேற்படி ஆசியக் கிண்ண போட்டிகள் 'ஏ', 'பி' என இரண்டு பிரிவுகளாக நடைபெறவுள்ளன. இதன்படி, 'ஏ' பிரிவில் இந்தியா, சீனா, தைபே, பிலிப்பைன்ஸ், ஹொங்கொங் ஆகிய அணிகளும் 'பி' பிரிவில் கொரியா, ஜப்பான், இலங்கை, மலேசியா, தாய்லாந்து, கசகஸ்தான் ஆகிய அணிகள் மோதுகின்றன.

# கூடைப்பந்தாட்டப் போட்டிக்கு சிங்கப்பூரின் அழைப்பை இலங்கை நிராகரிப்பு

சிங்கப்பூரில் நடைபெறவுள்ள கூடைப்பந்தாட்டப் போட்டித் தொடரொன்றில் பங்குகொள்வதற்காக இலங்கையின் தேசிய கூடைப்பந்தாட்ட அணியைச் சேர்ந்த வீராங்கனைகள் இரண்டு பேருக்கு விடுக்கப்பட்ட அழைப்பை இலங்கை கூடைப்பந்து சம்மேளனம் நிராகரித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

தர்ஷினி சிவலிங்கம் மற்றும் சஷிகா சமரசிங்ஹ ஆகிய இரண்டு வீராங்கனைகளுக்கு விடுக்கப்பட்ட அழைப்பே இவ்வாறு நிராகரிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் நடைபெறவுள்ள பொதுநலவாய் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக சிங்கப்பூர் ஊடாக இந்தியா செல்கின்ற நியூஸிலாந்து கூடைப்பந்தாட்ட அணியானது சிங்கப்பூரில் அந்நாட்டின் தேசிய அணியுடன் மூன்று போட்டிகளில் கலந்து கொள்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளது.



தர்ஷினி

செப்டெம்பர் 27 ஆம், 28 ஆம், 29 ஆம் திகதிகளில் இப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளின்போது நியூஸிலாந்திற்கு எதிராக சிங்கப்பூர்/இலங்கை ஒன்றிணைந்த அணியாகப் போட்டியிடுவதற்காகவே இலங்கையின் சார்பாக மேற்படி இரண்டு வீராங்கனைகளை அனுப்புமாறு கேட்கப்பட்டிருந்தது.

இருப்பினும், அடுத்த வருடம் கூடைப்பந்தாட்ட உலகக் கிண்ணப் போட்டிகள் நடைபெறவுள்ளமையால் இத்தகைய சந்தர்ப்பத்தில் இலங்கை போட்டியாளர்களை வேறு போட்டிகளில் கலந்து கொள்வதற்கு அனுப்புவது அணிக்குப் பாதகமாகவே அமையும் என்பதாலேயே இந்த அழைப்பு நிராகரிக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

கூடைப்பந்தாட்ட தரப்படுத்தல் பட்டியலில் நியூஸிலாந்து 2 ஆம் இடத்திலும் இலங்கை 15 ஆவது இடத்திலும் சிங்கப்பூர் 19 ஆவது இடத்திலும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

## பகிரங்க டென்னிஸில் கிலிஸ்டர்ஸ் செம்பியன்

அமெரிக்காவில் நடைபெறுகின்ற 'கிராண்ட் சலாம்' போட்டிகளில் மகளிருக்கான ஒற்றையர் பிரிவு பகிரங்க டென்னிஸ் போட்டியில் பெல்ஜியத்தை சேர்ந்த கிம் கிலிஸ்டர்ஸ் செம்பியன் பட்டத்தை வென்றுள்ளார்.

மேற்படி ஒற்றையர் பிரிவிற்கான இறுதிப் போட்டியில் பெல்ஜியத்தின் கிம் கிலிஸ்டர்ஸ் மற்றும் ரஷ்யாவின் வெராஷு, வானரேவா ஆகியோர் மோதினர்.

இதில் 6-2, 6-1 என்ற நேர் செட் கணக்கிலேயே கிலிஸ்டர்ஸ் வெற்றியீட்டி செம்பியன் பட்டத்தை சுவீகரித்துக் கொண்டார்.

அத்துடன், ஒரு மணிநேரத்திற்குள்



போட்டி முடிவுற்றமையும் குறிப்பிடத்தக்கது. 27 வயதே ஆகின்ற கிலிஸ்டர்ஸ் பெற்ற மூன்றாவது 'கிராண்ட் ஸலாம்' பட்டம் இதுவாகும். இதற்கு முன்னர் 2005 ஆம், 2009 ஆம் ஆண்டுகளில் இவர் 'கிராண்ட் ஸலாம்' பட்டங்களைப் பெற்றிருந்தார்.



## பயிற்சியாளராக குளூஸ்னர்

தென் ஆபிரிக்க கிரிக்கெட் அணியின் முன்னாள் சகலதுறை வீரரான லான்ஸ் குளூஸ்னர் பங்களாதேஷ் அணியின் வேகப்பந்து வீச்சுப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை அணியின் முன்னாள் வீரர் சம்பிக்க ராமநாயக்கவே மேற்படி பயிற்சியாளர் பதவியை வகித்துவந்துள்ளார். எனினும், அண்மையில் அவர் அந்தப் பணியிலிருந்து இராஜினாமா செய்திருந்தமையினாலேயே அப்பதவிக்கு குளூஸ்னர் தற்போது நியமிக்கப்பட்டுள்ளார்.

குளூஸ்னரின் நியமனம் குறித்து கருத்துத் தெரிவித்துள்ள பங்களாதேஷ் கிரிக்கெட் துறை அதிகாரிகள், "அடுத்த வருடம் நடைபெறவுள்ள ஆசிய கிண்ண 50 ஓவர் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள பங்களாதேஷ் அணியை பலம்மிக்க அணியாக அமைப்பதற்காகவே குளூஸ்னரை வேகப்பந்துப் பயிற்சியாளராக நியமித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விண்ணுக்கு சென்ற 'ஹயபுசா' பூமிக்குத் திரும்பியது



'ஹயபுசா' என்பது ஜப்பானின் விண்வெளி ஆய்வுக்கலமாகும். ஏழு வருட கால விண்வெளிப் பயணத்தை நிறைவு செய்து கடந்த ஜூன் மாதம் ஹயபுசா புவியை வந்தடைந்தது. இது தென் அவுஸ்திரேலியாவிலுள்ள 'அபோரிஜின்' பூர்வீககுடிகளின் பிரதேசத்திலேயே தரையிறங்கியது. இதனால், இந்த விண்கலத்தைத் தேடிவந்த ஜப்பானிய, அவுஸ்திரேலிய, அமெரிக்க விஞ்ஞானிகளுக்கு அபோரிஜின் பூர்வீககுடிகளது உதவியையும் பெறவேண்டியேற்பட்டது. அபோரிஜின் குடிமக்களுக்கு எவ்வித சங்கடமோ, பாதிப்புகளோ விளைவிக்காமல் அப்பிரதேசத்துக்குள் பிரவேசித்து குறித்த விண்கலத்தை மீட்டது புதியதொரு அனுபவமாக இருந்ததாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இதனை நவீன விண்வெளி யுகமும் தொன்மையான பாரம்பரிய யுகமும் ஒன்றிணைந்த ஒரு சம்பவமாகவே ஊடகங்கள் வர்ணித்திருந்தன.

## சுமேரா பிரதேசம்

அவுஸ்திரேலியாவின் தென் திசையில் அமைந்துள்ள பாலைவனப்பகுதியிலேயே ஹயபுசா ஆய்வுக்கலம் தரையிறங்கியது. 127,000 ச.கிலோமீற்றர் பரப்பளவுள்ள இப்பிரதேசம் 'சுமேரா' பிரதேசம் என அழைக்கப்படுகின்றது. இதுதான் அபோரிஜின்கள் வாழும் பிரதேசமாகும். மேலும், அபோரிஜின்களின் வணக்கஸ்தலங்கள் பலவும் இப்பிரதேசத்தில் அமைந்துள்ளன.

## ஹயபுசாவின் விண்வெளிப் பயணம்

2003 ஆம் ஆண்டிலேயே ஹயபுசா ஆய்வுக்கலத்தின் கதை ஆரம்பமாகியது. 'ஹயபுசா' என்றால் 'ராஜாளி' என பொருள்படுகின்றது. இந்த ஆய்வுக் கலத்தை ஜப்பானிய விண்வெளி முகவர்நிலையம் விண்ணுக்கு ஏவியது. புவியில் இருந்து 300 மில்லியன் கிலோமீற்றர் தூரத்தில் பயணித்துக்கொண்டிருந்த 'இடொகாவா' எனும் விண்கல்லில் இருந்து மண் மாதிரிகளைப் பெற்று, அதனை ஆய்வு செய்வதே ஹயபுசா விண்கலத்தின் நோக்கமாகும். 2003 இல் புவியில் இருந்து புறப்பட்டுச் சென்ற ஹயபுசா விண்கலம் இரண்டு வருடங்களுக்குப் பின்பே குறிப்பிட்ட விண்கல்லை நெருங்கியது. அந்த வகையில், விண்வெளியிலுள்ள விண்பொருளொன்றில் தரையிறங்கி மீண்டும் திரும்பிய ஒரே ஒரு ஆய்வுக்கலமாக இந்த ஹயபுசா விண்ணாய்வுக்கலம் கருதப்படுகின்றது.

ஹயபுசாவில் தொழில்நுட்ப தாமதங்களும் கோளாறுகளும் ஏற்பட்டாலும்கூட 'இடொகாவா' விண்கல்லில் இருந்து மண் மாதிரிகளையும் தரவுகளையும் அதனால் பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது. இதன்படி, பயணிக்கும் விண்பொருள் ஒன்றின் மண் மாதிரியைப் பெற்றுக்கொள்வதில் வெற்றியடைந்த முதல் சந்தர்ப்பமாக இது கருதப்படுகின்றது.





ஹயபுசா விண்கலம் 2003 இல் புறப்படுவதற்கு முன்



விண்கலத்தின் வருகை குறித்து விழிப்புடன்



விண்கல்லின் மண் மாதிரியை பெறும் முறையை குறிக்கும் கணினி வரைபடமொன்று

### விண்கல்லின் மண் மாதிரியைப் பெறும் நடவடிக்கை

விண்வெளியில் பயணிக்கும் விண்கல்லின் மண் மாதிரியைப் பெற்ற ஆளில்லா ஜப்பானிய விண்கலம் புவிக்குத் திரும்புகின்றது

**ஹயபுசா எனும் ராஜாளி**

2003 இல் விண்வெளிக்கு அனுப்பப்பட்டது.
2010 ஜூன் மாதத்தில் பூமிக்குத் திரும்பியது.

மண் மாதிரியை எடுத்துவந்த விண்கலம் அவுஸ்திரேலியாவில் தரையிறங்கியது.




2005 செப்டெம்பர் மாதத்தில்...

1. விண்கல்லுக்கு 10 கிலோமீற்றர் மேலே மிதந்துசென்று தரவுகளைச் சேகரித்தல்.
2. மனிதனின் உதவியின்றி இக்கலமானது தன்னியக்க செயல் தொகுதியை இயங்கவைத்து, கெமராவைப் பயன்படுத்தி விண்கல்லின் புகைப்படத்தை எடுத்துக்கொண்டே விண்கல்லை மெதுவாக நெருங்குதல்.
3. விண்கல்லிற்கு 100 மீற்றர் அருகில் சென்று, 10 செ.மீற்றர் தூரத்தைக் குறிவைத்து ஒலி அலைகளை அனுப்பி, கெமரா மூலம் அது (ஹயபுசா) தரையிறங்குவதற்கு உகந்த இடத்தை ஆராய்தல்.
4. கலத்தின் இயந்திரம் கீழ்நோக்கிப் பயணித்து, விண்கல்லின் மேற்பரப்பில் மெதுவாகத் தரையிறங்கல்.
5. மண் மாதிரிகளை எடுத்து வருதல்.
6. விண்கல்லில் இருந்து வெளியேறி மீண்டும் புவிக்குத் திருப்புதல்.

**மண் மாதிரியைப் பெறும் நடவடிக்கை**





Source: AFP/ISAS AFP

# சூரிய மண்டலத்துக்கு வெளியே புதிய கிரகங்கள்




சூரியனைச் சுற்றியுள்ள சுற்றுப்பாதைக்கு வெளியே சூரியனின் அளவை ஓரளவுக்கு ஒத்த புதிய கிரகமொன்று இருப்பதையும் இதுவரை இல்லாத மிகச் சிறிய கோள் உட்பட, மேலும் 7 புதிய கோள்களையும் சுவிற்சர்லாந்து விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இதுபற்றி ஜெனீவாவில் 'யுரோப்பியன் சதர்ன் ஒப்சர்வேடரி' சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது; சூரிய சுற்றுப்பாதைக்கு வெளியே சூரியனைப் போன்ற, அதே அளவிலான கிரகம் ஒன்று இருப்பது விண்வெளி ஆராய்ச்சியிலிருந்து தெரிய வந்துள்ளது. அந்தப் புதிய கோளின் சுற்றுப்பாதையில் மேலும் 7 கிரகங்கள் உள்ளன. அதில் ஒரு கிரகம் மிகச் சிறியது. அந்தக் கிரகமானது இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள கிரகங்களில் மிகச் சிறியது என்பதால், அது குறித்து விஞ்ஞானிகள் ஆச்சரியம் அடைந்துள்ளனர்.

புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள கிரகங்களில் பெரும்பாலானவை பூமியைவிட, 13 முதல் 25 மடங்கு பெரியவை."புதிய கிரகங்கள் அனைத்தும் பாறைகள், பனிக்கட்டிகளால் ஆனவை. அவை உறுதியானவை. அதன் மேற்பகுதியில் ஹைட்ரஜன், ஹீலியம் ஆகிய வாயுக்கள் இருக்கலாம் என நம்பப்படுகிறது. இந்தக் கிரகங்களில் உயிரினங்கள் வசிக்க வாய்ப்பிருக்கின்றதா? என்பது இதுவரை கண்டறியப்படவில்லை" என இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்ட விஞ்ஞானிகளில் ஒருவர் தெரிவித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## பொருத்தமான எழுத்துக்களைக்கொண்டு இடைவெளிகளை நிரப்புக 4

1. உ...... ப...... (ரை/றை/ணி/னி)
2. சு......கு (ள/ழ/ல)
3. க...... முகம் (ழி/ளி/லி)
4. அ...... விய...... (ரி/றி/ள்/ல்)
5. சி......பம் (ற்/ட்/ர்)
6. ப..... கலைக்க....கம் (ள்/ல்/ல/ழ)
7. க......வேப்பிலை (ரி/றி)
8. தொ...... ல் (ளி/ழி/லி)

## எதிர்ப்பாற் சொல்லை எழுதுக 5

1. தமையன் - ..........................
2. குறத்தி - ..........................
3. சீமான் - ..........................
4. குருடன் - ..........................
5. உழத்தி - ..........................
6. மாதா - ..........................
7. பாலகன் - ..........................
8. சிநேகிதி - ..........................

## 'h' எழுத்தில் ஆரம்பமாகும் உருக்களில் X அடையாளமிடுக 1







அண்மைக்காலத்திலிருந்து 'விஜய்' இதழ்களில் பிரசுரமாகி வருகின்ற குறுந்தகவல்கள் மிகவும் பயனுடையதாக இருக்கின்றன.

**-எஃப்.சகீனா, மஹகொட.**

உன்னில் பிரசுரமாகும் அனைத்து ஆக்கங்களும் மிக நன்றாக உள்ளன. 'விஜய்' போன்று பல பத்திரிகைகள் சந்தையில் இருந்தாலும், அதிகமான மாணவர்கள் 'விஜய்'யை நாடுவது அதன் சிறப்பையே வெளிப்படுத்துகின்றது. மேலும் பல புதிய கண்டுபிடிப்புகள், ஆச்சரியமான தகவல்கள் என்பனவற்றையும் உன்னில் சேர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**-சௌகி அஹமட், அக்கரைப்பற்று-02.**

அனைத்து ஆக்கங்களையும் வாசித்து நன்மையடைந்தேன். 'உலக அறிவை வளர்த்துக்கொள்வோம்' எனும் பகுதியின் பயன் சுட்டிக்காட்டத்தக்கது.

**-வை.திவ்யலோஜனி, கொழும்பு வீதி, அப்புத்தளை.**




'இணையத்துக்கு 41 வருடங்கள்', 'நோன்புப் பெருநாள்', 'முத்திரைகளில் பறவைகளின் படங்கள்', 'கணினி தொடர்பான தகவல்கள்' அனைத்தும் மிகத் தெளிவாகவும் அறிவுபூர்வமானதாகவும் இருந்தன.

**-க.லோகேஷ், பிரதான வீதி, மொனறாகலை.**

'விஜய்'யே! ஒவ்வொரு வாரமும் நீ எம்மை அறிவுசார் உலகினுள் நுழைய வைக்கின்றாய். 'இராமாயணம்', 'சங்கிலி மன்னன் வரலாறு', 'வாரம் ஒரு நாடு', 'விண்வெளித் தகவல்கள்' போன்ற தொடர் அம்சங்களும் ஏனைய ஆக்கங்களும் என் மனதில் ஆழமாகப் பதிந்துவிட்டன.

**-எம்.ஸஹ்ரா, தரம்-9, அந்நூர் மு.ம.வித்., வெலிகம.**

'விஜய்'யின் ஆரம்ப இதழ் தொடக்கம் இன்றுவரை வெளிவந்து கொண்டிருக்கின்ற அனைத்து இதழ்களையும் வாசித்து வருகின்றேன். சகல ஆக்கங்களும் பயனுள்ளதாகவும் நிகழ்கால, சமூக, விஞ்ஞான, கல்வி, அரசியல் விடயங்களைச் சார்ந்திருப்பதையுமிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

**-எம்.எச்.சஹ்ரான், வைத்தியசாலை வீதி, பெரிய நீலாவணை.**

'கருந்தலைக் காகமும் கனேரிப் பறவையும்' என்ற தொடர்கதை என்னை மிகவும் கவர்ந்தது. 'சங்கிலி மன்னன்', 'உலகின் முதலாவது நாவலாசிரியை', 'வரலாற்றிலிருந்து' என்பன அறிவு மேம்பாட்டுக்குத் துணை நிற்கின்றன.

**-ஜீ.ஜதுஷன், அருணோதயாக் கல்., யாழ்ப்பாணம்.**

'நோன்புப் பெருநாள்', 'சிங்கராஜ வனம்', 'சிறுகதை' மற்றும் பிரசுரமான அனைத்து ஆக்கங்களையும் வாசித்தறிந்து நற்பயன் பெற்றேன்.

**-ந.எஃப்.நிரோஸா, தரம்-8A, அல்-அஸ்ஹர் வித்., கல்முனைக்குடி-07.**

5 சதத்திலிருந்து 20.00 ரூபா வரையான பறவைகளின் படங்கள் பதித்த முத்திரைகள் பற்றி அறியத்தந்ததோடு, அந்தப் பறவைகள் குறித்து மேலதிக தகவல்களையும் தந்தமைக்கு நன்றிகள் பல.

**-ந.அருள்நேசன், ரோஹினி வீதி, வெள்ளவத்தை.**

**இந்த இதழில் (22.09.2010) வெளியாகியிருக்கும் ஆக்கங்கள் குறித்து உங்கள் விமர்சனங்களை தபாலட்டையில் மாத்திரம் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.**

**அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 29.09.2010.**

**அனுப்ப வேண்டிய முகவரி:** வாசகர் மடல், 'விஜய்' த.பெ.எண் 2037, கொழும்பு.






தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2010.09.29 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 279**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**


## கீழுள்ள தரவுகளுக்கேற்ப கட்டங்களைப் பூரணப்படுத்துக 2




**Across**
1. 129 + 100 + 254
3. 91 + 134
5. 273 + 279 + 314
6. 149 + 120 + 149 + 196
8. 258 + 220
10. 261 + 314
12. 112 + 102
14. 187 + 198 + 261 + 319
15. 360 + 148
16. 103 + 289

**Down**
1. 179 + 156 + 151
2. 88 + 149 + 147
3. 53 + 76 + 135
4. 176 + 402
7. 92 + 85
9. 339 + 432
10. 374 + 191
11. 153 + 127 + 127 + 191
12. 92 + 161
13. 68 + 112 + 92 + 130

## இணைக்க 3

Beach
Shorts
Flower
Sun
Ball
Pool



## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 276 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
பா.ராகவி,
49, சாஸ்திரியார் ஒழுங்கை,
அரியாலை.

**போட்டி: 02**
ஜே.ஹம்ஸா,
17/1, நாங்குருகம,
மாவனல்லை.

**போட்டி: 03**
எம்.ஹாஷிர், 87/D, பிடுனுகம,
முறுதகஹமுல.

**போட்டி: 04**
வி.சஜீத், 552/1, பைப் வீதி,
பாண்டிருப்பு-02.

**போட்டி: 05**
சவ்மி அஹ்மட்,
10/14, மத்திய ஒழுங்கை,
தர்கா நகர்.

### பாராட்டுப் பெறுவோர்:

- நூறுல் ஹம்தா, வெலிகம.
- ஆர்.துவாரகீ, நாவலப்பிட்டி.
- சி.கிரிஷிகா, சாவகச்சேரி.
- சி.ஆயிஷா, கம்பளை.
- சண்முகதாஸ், டிக்கோயா.
- செய்யத் ஹுஸைன், அக்குறனை.
- எஃப்.சப்ரினா, பசறை.
- சூ.பிரியதக்ஷி, பருத்தித்துறை.
- அ.சலோமி, மட்டக்களப்பு.
- ஹிமாஸ் நஸீம், திக்குவல்லை.

## அறிவுக்கு விருந்து 276 விடைகள்


**போட்டி: 01**
1. மூடநம்பிக்கை
2. உயிரெழுத்து
3. கேள்விஞானம்
4. ஒத்துழைப்பு

**போட்டி: 02**
எஞ்சிய 3 துண்டுகளையும் 12 சமதுண்டுகளாக வெட்டி ஒவ்வொருவரும் 3 துண்டுகள் வீதம் எடுக்கலாம்.


**போட்டி: 03**



**போட்டி: 04**



**போட்டி: 05**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதவி கோரிய அயல் மன்னன்



மன்னார் நகரமும் அதன் சுற்றுப்புறங்களில் உள்ள அனைத்துக் கிராமங்களும் சங்கிலி மன்னனின் கட்டுப்பாட்டுக்குள் வந்தன. சங்கிலி மன்னன் சகல மன்னார்ப் பகுதி அதிகாரிகளையும் வரவழைத்து எல்லைப்புறங்கள் எங்கும் நன்கு பயிற்சி பெற்ற வீரர்களை நிறுத்துமாறு பணித்தான். பின்னர் பாலாவிக்கரைக்குச் சென்று அங்கு நீராடி எல்லாம் வல்ல கேதீஸ்வரப் பெருமானை வணங்கி தன் படைவீரர்களோடு பூநகரியை நோக்கி மீண்டும் புறப்பட்டான். வெற்றி வீரனாக வந்த அவனை மக்கள் வெள்ளம் வழியெங்கும் கூடி வாழ்த்தி அனுப்பியது. பூநகரி வந்தடைந்த மன்னன் அங்கு இரவைக் கழித்த பின் அங்கிருந்து புறப்பட்டு கொழும்புத்துறை வந்து அரியாலையூடாக நல்லூரை வந்தடைந்தான். நல்லூர் நகரம் விழாக் கோலம்பூண்டது. மக்கள் மன்னனையும் வீரர்களையும் மகிழ்வுடன் வாழ்த்தி வரவேற்றனர்.

மாதமொன்று பறந்தோடியது. சங்கிலி மன்னன் அரச

**சங்கிலி மன்னன் சபையோரை நோக்கி, "மாயாதுன்னைக்கு உதவி செய்ய வேண்டியது எம் தலையாய கடமை. எனவே, தளபதியாரே! தகுதிவாய்ந்த வீரர்களை மாயாதுன்னைக்கு உதவியாக அனுப்பி வையுங்கள்" எனத் தளபதியாரைப் பார்த்து உத்தரவு பிறப்பித்தான்**

சபையில் இருந்தபோது சீதாவாக்கை மண்ணை ஆட்சி செய்த, மாற்றார் நேரில் கண்டால் அஞ்சியோடும் வீரம் நிறையப்பெற்ற, மானமுள்ள, நாட்டுப்பற்று நிறையப்பெற்ற, மாயாதுன்னை என்னும் சிங்கள மன்னன் அனுப்பிய ஓலையோடு வீரன் ஒருவன் ராஜ சபைக்குள் பிரவேசித்தான். அவன் அந்த ஓலையில் உள்ள செய்தியை சங்கிலி மன்னனிடம் கையளித்தான்.

"நல்லை நகரில் இருந்து யாழ்ப்பாணத்தை ஆட்சிபுரியும் இலங்கைத்தாயின் புத்திரனே! எல்லையில்லா அறிவும், ஆற்றலும் மிக்கவனே! ஈடிணையற்ற வீரனே! சுதந்திரத்தைக் காக்கின்ற உத்தமனே! தொல்லை தந்த பறங்கியரை தொலைத்துக்கட்டி ஓட, ஓட விரட்டிய தீரனே! அல்லலுற்று ஆதரவு இழந்து நிற்கும் இந்நேரத்தில் உன் உதவியை நாடி இவ்வோலையை வரைகிறேன். கொழும்புக் கோட்டையை ஆட்சி புரிந்த எந்தன் மூத்தோன் கொலையுண்ட காரணத்தால் நாட்டை ஆளும் வாரிசாக நானிருக்க, பறங்கியர்கள் அதனைக் கருத்தில் கொள்ளாது அவர்களின் எண்ணத்திற்கு எல்லாம் தலையாட்டும் என் அண்ணன் மகனை அரசனாக்கி உள்ளார்கள்.




ஆகையினால் அக்கொடிய பறங்கியரோடு போர் செய்வதற்கு ஆயத்தமாகி நிற்கின்றேன் யான். சங்கிலியே! என்னருமை நண்பனே! என்னிடம் உள்ள படை வீரர்களின் எண்ணிக்கை போதாமையினால் உன் படைவீரர்கள் நூற்றுக்கணக்கானோரை என்னிடம் அனுப்பி உதவி செய்வாயாக. சிங்களவர், தமிழர் என நாம் மொழியால் வேறுபட்டாலும் தேசத்தால் ஒன்றுபட்டவர்கள். எங்கிருந்தோ வந்து எம்மண்ணை ஆக்கிரமிக்க நினைக்கும் அந்தப் பறங்கியரை அழித்தொழிக்க, எம்மண்ணை விட்டு ஓடச்செய்ய நாம் ஒன்று சேர்வது சாலச் சிறந்தது அல்லவா?

புத்த பகவானின் சீலமிங்கே புறக்கணிக்கப்படுகிறது. சைவமார்க்கம் இத்தரையில் சீரழிகிறது. இஸ்லாம் மதத்தோர் இங்கே வாழ்வதற்கு அஞ்சுகின்றார்கள். தமிழ், சிங்களப் பெண்களின் கற்புக்கு இங்கே களங்கம் ஏற்படுகின்றது. பொது மக்களின் சொத்துக்கள் சூறையாடப்படுகின்றன. எத்திசையும் புகழ்ந்து போற்றும் என் ஆருயிர் நண்பா! எனக்கு உன் உதவி அவசியம் வேண்டும். செய்வாயா? உன்னையே நம்பியுள்ளேன்" என்றிருந்தது. அதனை வாசித்து முடித்த சங்கிலி மன்னன் சபையோரை நோக்கி, "மாயாதுன்னைக்கு உதவி செய்ய வேண்டியது எம் தலையாய கடமை. எனவே, தளபதியாரே! தகுதிவாய்ந்த வீரர்களை மாயாதுன்னைக்கு உதவியாக அனுப்பி வையுங்கள்" எனத் தளபதியாரைப் பார்த்து உத்தரவு பிறப்பித்தான்.

மன்னனின் உத்தரவை படைவீரர்களுக்குத் தளபதி கூறிய போது, பல வீரர்கள் போரில் மாயாதுன்னைக்கு உதவ முன்வந்தார்கள். எம்மண்ணில் வாலாட்டும் பறங்கியரை ஒழித்து நாட்டை விட்டு விரட்ட வேண்டும் என்பதே படைவீரர்களின் ஒரே நோக்கமாக இருந்தது. மாயாதுன்னைக்கு உதவிபுரிய முன்வந்த வீரர்கள் நல்லநாள் ஒன்றில் மன்னன் சங்கிலியின் ஆசியுடன் தம் வீரப்பயணத்தை ஆரம்பித்தார்கள்.

*தூய உள்ளமும் நாட்டுப்பற்றும் மிக்க வீரனாக சங்கிலி மன்னன் விளங்கினான். அவனது சிறப்பைப் பொறுக்காத அவன் இரத்தவழி வந்த பரநிருபசிங்கன் தன் தீய செயற்பாட்டை சங்கிலி மன்னனுக்கு எதிராகத் தொடர்ந்தும் செய்தவண்ணமே இருந்தான்*

தூய உள்ளமும் நாட்டுப்பற்றும் மிக்க வீரனாக சங்கிலி மன்னன் விளங்கினான். அவனது சிறப்பைப் பொறுக்காத அவன் இரத்தவழி வந்த பரநிருபசிங்கன் தன் தீய செயற்பாட்டை சங்கிலி மன்னனுக்கு எதிராகத் தொடர்ந்தும் செய்தவண்ணமே இருந்தான். அவனுக்குப் பக்கபலமாக அப்பா முதலியான அவன் தாய்மாமனும், ஊர்காவற்றுறையின் சிற்றரசன் காக்கைவன்னியனும் இருந்தார்கள். (தொடரும்...)

# காய்கள் பழுப்பது எப்படி?





அழகும் சுவையும் சக்தியும் மிக்கவை பழங்கள்! இயற்கை அளித்த வரம் என்று கூட சொல்லலாம். பழங்களில்தான் எத்தனை வகைகள்! எத்தனை நிறங்கள்!

பொதுவாக காய்கள், கசப்பாகவோ அல்லது இனிப்பாகவோ இருப்பதை உணர்வோம். காய்கள் பெரும்பாலும் கடினமாகவும் பச்சை நிறத்திலும் இருக்கும். அவை அப்படி இருப்பதற்குக் காரணம் என்ன?

சாதாரணமாகக் காய்களில் மாலிக்,சிட்ரிக், டார்டாரிக் ஆகிய கரியமில அமிலங்கள் அதிகமிருக்கும். அத்துடன், பொலிசாக்கரைடுகள் எனப்படும் கூட்டுச் சர்க்கரை என்ற மாவுப் பொருளின் (கார்போஹைட்ரேட்) பெரிய மூலக்கூறுகளும் சிறிதளவு புரதப் பொருளும் இருக்கும். இந்தக் கலவையால்தான் காய்கள் கடினத் தன்மையுடன் இருக்கின்றன.

பறிக்கப்பட்ட காய்களில் இயற்கையாகவே உருவாகும் எதிலீன் வாயு, பழுக்கும் செயற்பாட்டைத் தூண்டிவிடுகிறது. பழுக்கும் நடைமுறையை விரைவுபடுத்தும் இந்த வாயு, அதிவிரைவில் மாற்றங்கள் நிகழக் காரணமாக இருக்கிறது. இதன் காரணமாக, காய்களின் மேற்புறம் உள்ள பச்சையம் மறைந்து, சிவப்பு மற்றும் மஞ்சள் நிறம் தோன்றுகின்றது. வேதிப் பொருட்கள்தான் பழங்களுக்கு இவ்வாறு வேறுபட்ட நிறங்களைக் கொடுக்கின்றன. அப்போது பொலிசாக்கரைடு என்ற சர்க்கரைக் கூட்டுப்பொருள் உடைக்கப்பட்டு, சிறிய சர்க்கரைப் பொருளாக்கப்பட்டு விடுகிறது. இந்தச் சர்க்கரை காரணமாகத்தான் பழங்கள் இனிக்கின்றன. மேலும், அவை மென்மையாகவும் மாறிவிடுகின்றன.

காய்கள் பழுக்கும்போது இயற்கையாகவே எளிதில் ஆவியாகக்கூடிய வாயுக்களைச் சுரக்கின்றன. இதன் காரணமாக, ஒவ்வொரு பழத்திற்கும் மாறுபட்ட மயக்கும் நறுமணம் தோன்றுகிறது. தனது சந்ததியைப் பெருக்குவதற்காகத்தான் மரம் இவற்றையெல்லாம் செய்கிறது. பழத்தின் நறுமணத்தால் ஈர்க்கப்படும் பறவைகளும் விலங்குகளும் அவற்றைச் சாப்பிட்டுவிட்டு விதைகளைப் பரப்பும். இதன் காரணமாக, அந்த விதைகள் பல இடங்களில் மரமாக வளரும். இதுதான் இயற்கையின் சுழற்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# ரூபா 1500 மதிப்புள்ள கணினி தயாரிப்பு



1500 ரூபா செலவில் இந்தியா கணினியொன்றை அறிமுகம் செய்துள்ளதென்றால் நம்புவீர்களா? அது ஆச்சரியமாக இருந்தாலும் உண்மைதான்.

கணினியானது வசதி படைத்தவர்களுக்கு மட்டுமே விலைகொடுத்து வாங்க முடிந்த ஒன்றாக இருப்பதனால் இந்தியாவில் வறுமைக் கோட்டின்கீழ் வாழ்கின்ற பிள்ளைகளும் கணினியை விலைகொடுத்து வாங்கக்கூடியவாறு குறைந்த விலையிலான கணினியொன்றை *(Low cost PC)* தயாரிக்குமாறு இந்திய அரசாங்கம் அந்நாட்டின் தனியார் நிறுவனங்களிடம் பணித்திருந்தது. இதற்கு எந்தவொரு நிறுவனமும் முன்வராத நிலையில் இந்திய பல்கலைக்கழக மாணவர்களிடமும், பேராசிரியர்களிடமும் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டதன் பயனாக 'சாக்ஷாத்' *(Sakshat)* என்ற பெயரிலான 35 டொலர் மதிப்பிலான விலை குறைந்த கணினி அறிமுகப்படுத்தப்பட்டது.




அதன்படி, இந்தக் கணினியின் மதர்போர்ட்டை *(Mother Board)* வடிவமைத்தது இந்தியாவின் வீ.ஐ.டீ வேலூர் தொழில்நுட்பக் கல்லூரியைச் சேர்ந்த ஒரு மாணவராவார். மேற்படி, கணினியின் ஏனைய பாகங்கள் இன்னும் சில உயர்தொழில்நுட்ப நிறுவனங்களினால் வடிவமைக்கப்பட்டிருந்தன. அது மட்டுமல்ல; இந்தக் கணினியானது தொடுகைத் திரை *(Touch Screen)* வசதியைக் கொண்டதென்பதும் குறிப்பிடத்தக்கது.



மேலும் 'வேர்ட் புரொஸஸிங்' வேலைகளை செய்யவும் முடியும். இணைய சேவையுடன் தொடர்புபடவும் வீடியோ மாநாடுகளையும் *(Conference)* நடத்தவும் முடியும். அதுமட்டுமன்றி, இது சூரிய சக்தியினால் இயங்கக்கூடியது. இதற்கென 'ஹார்ட் டிஸ்க்' கிடையாது. சாதாரணமாக, கைத்தொலைபேசியில் உள்ள மெமரி கார்ட் அளவிலான பாகமொன்றே உள்ளது. இதனை 'டெப்லொய்ட்' கணினி என்றும் குறிப்பிடுகின்றனர்.

இதில் மற்றுமொரு விசேடம் என்னவென்றால் மேற்படி கணினி இன்னும் அதிக அளவில் பிரபல்யம் அடையுமானால் ஆகக் குறைந்தது 10 டொலராக இதன் விலையைக் குறைக்கமுடியும் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதனால், ஏழை மாணவர்களுக்கு தாங்கிக்கொள்ளக்கூடிய விலையாக இது அமையும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆயினும், இந்தக் கணினி எப்போது தயாரிக்கப்பட்டு, சந்தைப்படுத்தப்படும் என்பதற்கு இன்னும் விடை கிடைக்கவில்லை. காரணம், இதனை முழுமையாகப் பொறுப்பேற்று தயாரிப்பை மேற்கொள்வதற்கான முதலீட்டைச் செய்வதற்கு தற்போது எந்தவொரு நிறுவனமும் முன்வராமையே ஆகும்.





எந்தவொரு சூழலுக்கும் ஒத்து வரக்கூடிய புதியவகை 'லெப்டொப்' ஒன்றை ஜப்பானிய நிறுவனம் ஒன்று அறிமுகம் செய்துள்ளது.

அதாவது, இந்த



# நீர் புகாத லெப்டொப் அறிமுகம்

லெப்டொப் நீர், தூசு, அதிர்வுகள், கீழே விழுதல் என எந்தவொரு சூழ்நிலையிலும் பாதிக்கப்படாமல் தாக்குப் பிடிக்கக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டுள்ளமையே இதன் சிறப்பாகும். ஜப்பானின் முன்னணி இலத்திரனியல் நிறுவனமான 'பெனசொனிக்' நிறுவனமே மேற்படி லெப்டொப்பை தயாரித்துள்ளது.

Tough book CF-31 எனப்படும் இந்த லெப்டொப் கணினி Core 15 புரொஸஸரையும் 13.1-inch LCD திரையையும் கொண்டு அமைக்கப்பட்டதாகும். செப்டெம்பர் 2 ஆம் திகதியன்று டோக்கியோ நகரில் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட இந்த லெப்டொப், நொவெம்பர் 18 ஆம் திகதியன்று ஜப்பானிய சந்தையில் விற்பனைக்கு விடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2010, செப்டெம்பர் மாதம் 22 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday September 22, 2010.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org